தமிழ்நாடு அரசு

வாய்மையே வெல்லும்

பள்ளிக் கல்வித்துறை

செங்கல்பட்டு மாவட்டம்



12ஆம் வகுப்பு

கணக்குப்பதிவியல்

(தமிழ் வழி)

சுருக்கப்பட்ட சிறப்பு வழிகாட்டி கையேடு

வெளியீடு

முதன்மைக்கல்வி அலுவலகம்

செங்கல்பட்டு மாவட்டம்

ஆக்கம்

குழத் தலைவர்

திருமதி இர. திருவளர்செல்வி,

முதன்மைக்கல்வி அலுவலர்,

செங்கல்பட்டு மாவட்டம்

திரு செ. விஜயன்,

மாவட்டக்கல்வி அலுவலர்(இடைநிலை)(பொறுப்பு),

மதுராந்தகம்.

கையேடு மேலாய்வாளர்கள்

திரு ஏ. ராஜேஷ்குமார்,
தலைமையாசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி,
அனந்தமங்கலம்,
செங்கல்பட்டு மாவட்டம்.

திரு பொன். மணிமாறன்,
பள்ளித் துணை ஆய்வாளர்,
மதுராந்தகம்,
செங்கல்பட்டு மாவட்டம்.

கையேடு குழு உறுப்பினர்கள்

திரு பெ. கஜபதி,
முதுகலை ஆசிரியர் (வணிகவியல்),
அரசு மேனிலைப் பள்ளி,
குண்ணங்குளத்தூர்.

திரு பெ. தெய்வசிகாமணி,
முதுகலை ஆசரியர் (வணிகவியல்),
அரசு மகளிர் மேனிலைப் பள்ளி,
செய்யூர்.

திரு க. கிருஷ்ணமூர்த்தி,
முதுகலை ஆசரியர் (வணிகவியல்),
எம்.சி.எஸ்.எம். அரசு மேனிலைப் பள்ளி,
படாளம்.

திருமதி க. கலைவாணி,
முதுகலை ஆசரியர் (வணிகவியல்),
ஹச்.எஸ்.எஸ்.அரசு மகளிர் மேனிலைப் பள்ளி,
மதுராந்தகம்

திரு ஆ. நடராஜன்,
முதுகலை ஆசரியர் (வணிகவியல்),
மார்வார் அரசு ஆண்கள் மேனிலைப் பள்ளி,
அச்சிறுப்பாக்கம்.

திரு த. சிவா,
முதுகலை ஆசிரியர் (வணிகவியல்),
அரசு மேனிலைப் பள்ளி,
வெண்ணாங்குபட்டு.

திரு ஜெ. ஸ்ரீராம்,
முதுகலை ஆசிரியர் (வணிகவியல்),
அரசு மேனிலைப் பள்ளி,
வீராணகுண்ணம்.

திருமதி ச. ரமா,
முதுகலை ஆசிரியர் (வணிகவியல்),
அரசு மேனிலைப் பள்ளி,
வேடந்தாங்கல்.

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்.

– குறள்.

அன்பார்ந்த மாணவர்களே!

1. உங்களின் இயல்பினை அறிந்து, அனைவரும் வெற்றி பெறும் நோக்குடன் எனது வழிகாட்டுதலின் பேரில் உருவாக்கப்பட்ட சிறப்பு வழிகாட்டி இது. இந்த வழிகாட்டி முழுமையும் படித்தால் நீங்கள் வெற்றி பெறுவது உறுதி.

2. படித்ததை எழுதிப் பழகுங்கள், மேலும் படித்த வினா விடைகளைச் சக மாணவர்களோடு கலந்து பேசி தெளிவாகுங்கள், வெற்றி எளிது...

3. முயன்றால் முடியாதது எதுவுமே இல்லை. உங்களால் முடியாதது வேறு எவராலும் முடியாது என்பதை உணருங்கள்.

4. நாளைய நாட்கள் உங்களுக்காகவே காத்திருக்கின்றன. இச்சிறப்பு வழிகாட்டி உங்களை வெற்றிக்கு அழைத்துச் செல்ல இருக்கிறது. கல்வியிலும், வாழக்கையிலும் வசந்தம் பெற வாழ்த்துக்கள்.....!

முதன்மைக்கல்வி அலுவலர்,
செங்கல்பட்டு.

ஒரு மதிப்பெண் வினா-விடைகள்

1. முழுமை பெறா பதிவேடுகளை பொதுவாக பராமரித்து வருவது *[July 22, MAR 26]*

(அ) அரசு (ஆ) நிறுமம் **(இ) சிறிய அளவிலான தனிஆள் வணிகம்**

(ஈ) பன்னாட்டு நிறுவனங்கள்

2. நிலை அறிக்கை என்பது *[June 25, MAR 23]*

(அ) வருமானம் மற்றும் செலவுகள் அறிக்கை

(ஆ) சொத்துகள் மற்றும் பொறுப்புகள் அறிக்கை

(இ) ரொக்க நடவடிக்கைகளின் தொகுப்பு

(ஈ) கடன் நடவடிக்கைகளின் தொகுப்பு

3. பொறுப்புகளைக் காட்டிலும் மிகுதியாக உள்ள சொத்துகள் *[MAR 25]*

(அ) நட்டம் (ஆ) ரொக்கம் **(இ) முதல்** (ஈ) இலாபம்

4. கடன் விற்பனைத் தொகை கணக்கிட தயாரிக்கப்படுவது *[MAR 24, JUNE 25]*

(அ) மொத்த கடனாளிகள் க/கு (ஆ) மொத்த கடனீந்தோர் க/கு

(இ) பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு க/கு (ஈ) செலுத்துதற்குரிய மாற்றுச்சீட்டு க/கு

5. உரிமையாளரின் சொத்துகள் ₹ 85,000 மற்றும் பொறுப்புகள் ₹ 21,000 எனில், அவருடைய முதல் தொகை: *[MAR 23, MAR 26]*

(அ) ₹ 85,000 (ஆ) ₹ 1,06,000 (இ) ₹ 21,000 **(ஈ) ₹ 64,000**

6. கடனாளிகள் தொடக்க இருப்பு = ₹ 30,000, பெற்ற ரொக்கம் = ₹ 1,00,000, கடன் விற்பனை = ₹ 90,000 எனில், இறுதி கடனாளிகள் இருப்பு எவ்வளவு? *[MAR 25]*

(அ) ₹ 30,000 (ஆ) ₹ 1,20,000 (இ) ₹ 40,000 **(ஈ) ₹ 20,000**

7. தொடக்கநிலை அறிக்கை வழக்கமாக தயாரிக்கப்படுவது

(அ) தொடக்க முதல் கண்டறிய (ஆ) இறுதிமுதல் கண்டறிய

(இ) அவ்வாண்டின் இலாபம் கண்டறிய (ஈ) அவ்வாண்டின் நட்டம் கண்டறிய

8. வருவாய் மற்றும் செலவினக்கணக்கு ஒரு *[July 22, June 24, MAR 25]*

(அ) பெயரளவுக் கணக்கு (ஆ) சொத்துக் கணக்கு

(இ) ஆள்சார் கணக்கு (ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு

9. பெறுதல் மற்றும் செலுத்தல்கள் கணக்கு ஒரு *[MAR 26]*

(அ) சொத்துக் கணக்கு (ஆ) பெயரளவுக் கணக்கு

(இ) ஆள்சார் கணக்கு (ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு

10. பெறுதல் மற்றும் செலுத்தல்கள் கணக்கின் இருப்பு காட்டுவது *[July 22]*

(அ) அந்த ஆண்டில் ஏற்பட்ட நட்டம்

(ஆ) அந்த ஆண்டின் செலவுகளைக் காட்டிலும் மிகுதியான வருமானம்

(இ) அந்த ஆண்டின் மொத்த ரொக்க செலுத்தல்கள்

(ஈ) அந்நாளைய ரொக்க மற்றும் வங்கி இருப்பு

11. வருவாய் மற்றும் செலவினக்கணக்கு தயாரிக்கப்படுவதன் மூலம் கண்டறியப்படுவது *[MAR 24]*

(அ) இலாபம் அல்லது நட்டம் (ஆ) ரொக்கம் மற்றும் வங்கி இருப்பு

(இ) உபரி அல்லது பற்றாக்குறை (ஈ) நிதிநிலை

12. நடப்பாண்டில் பெறவேண்டிய சந்தா இன்னும் பெறாதது *[MAR 24]*

(அ) ஒரு சொத்து (ஆ) ஒரு பொறுப்பு (இ) ஒரு செலவு (ஈ) தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று

13. ஆயுள் உறுப்பினர் கட்டணம் என்பது *[July 22, MAR 26]*

(அ) வருவாயினச் செலவு (ஆ) முதலினச் செலவு

(இ) வருவாயின வரவு **(ஈ) முதலின வரவு**

14. ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக பெற்ற நன்கொடை *[June 24, June 25]*

(அ) வருவாயின வரவு **(ஆ) முதலின வரவு**

(இ) வருவாயினச் செலவு (ஈ) முதலினச் செலவு

15. ஒரு மன்றத்தில் உள்ள 500 உறுப்பினர்கள் ஆண்டு சந்தாவாக ₹ 100 செலுத்துகின்றனர். நடப்பாண்டில் பெறவேண்டிய சந்தா இன்னமும் பெறப்படாதது ₹ 200; முன்கூட்டிப்பெற்ற சந்தா ₹ 300. வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் காட்டப்பட வேண்டிய சந்தா தொகையினைக் கண்டறியவும். *[MAR 23]*

(அ) ₹ 50,000 (ஆ) ₹ 50,200 (இ) ₹ 49,900 (ஈ) ₹ 49,800

16. கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாத நிலையில் நிறுவனத்தின் இலாபம் கூட்டாளிகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படுவது *[Jun 25]*

(அ) சமமான விகிதத்தில் (ஆ) முதல் விகிதத்தில்

(இ) இரண்டும் (அ) மற்றும் (ஆ) (ஈ) மேற்கூறிய எதுவுமில்லை

17. கூட்டாளிகளுக்கிடையே கூட்டாண்மை ஒப்பந்தம் இல்லாத போது முதல் மீது வட்டி *[July 26, MAR 23]*

(அ) வழங்கப்படுவதில்லை (ஆ) ஆண்டுக்கு 6% (இ) ஆண்டுக்கு 5% (ஈ) ஆண்டுக்கு 12%

18. கூட்டாளிகளிடமிருந்து நிறுவனம் கடன்கள் பெற்றிருந்தால், அக்கடன்களுக்கு இந்திய கூட்டாண்மை சட்டம் 1932–ன்படி அனுமதிக்கப்படும் வட்டி: *[July 22, MAR 23, MAR 25]*

(அ) ஆண்டுக்கு 8% (ஆ) ஆண்டுக்கு 12% **(இ) ஆண்டுக்கு 6%** (ஈ) ஆண்டுக்கு 5%

19. கூட்டாண்மை நிறுவனத்தில், நிலை முதல் முறை பின்பற்றப்படும்போது பின்வருவனவற்றுள் எது முதல் கணக்கில் காட்டப்படும்? *[MAR 24]*

(அ) கூடுதல் முதல் கொண்டு வந்தது (ஆ) முதல் மீது வட்டி

(இ) எடுப்புகள் மீது வட்டி (ஈ) இலாபப்பகிர்வு

20. கூட்டாண்மை ஒப்பந்தம் இல்லாதபோது கூட்டாளிகள் பெற உரிமையுடையது. *[JUN 25, MAR 26]*

(அ) சம்பளம் (ஆ) கழிவு **(இ) கடன் மீது வட்டி** (ஈ) முதல் மீது வட்டி

21. ஒரு கூட்டாளி ஒவ்வொரு மாத நடுவிலும் குறிப்பிட்ட தொகையை வழக்கமாக எடுத்துக் கொள்ளும் போது, அந்த எடுப்புகள் மீது கணக்கிடப்படும் வட்டிக்குரிய மாதங்கள். *[July 22]*

(அ) 5.5 மாதங்கள் **(ஆ) 6 மாதங்கள்** (இ) 12 மாதங்கள் (ஈ) 6.5 மாதங்கள்

22. பின்வருவனவற்றுள் எது இலாபநட்டப் பகிர்வு கணக்கில் பற்று வைக்கப்படுகிறது? *[MAR 26]*

(அ) அலுவலகச் செலவுகள் (ஆ) பணியாளர் ஊதியம்

(இ) கூட்டாளி ஊதியம் (ஈ) வங்கி கடன் மீது வட்டி

23. உயர் இலாபம் என்பது பின்வரும் இரண்டிற்கும் இடையேயான வேறுபாடாகும்: *[July 22, June 25]*

(அ) பயன்படுத்தப்பட்ட முதல் மற்றும் சராசரி இலாபம் (ஆ) சொத்துகள் மற்றும் பொறுப்புகள்

(இ) சராசரி இலாபம் மற்றும் சாதாரண இலாபம் (ஈ) இவைகளில் எதுவுமில்லை

24. ஒரேவகை நிறுவனங்களின் சராசரி இலாபவிகிதமாக கருதப்படுவது *[MAR 25]*

(அ) சராசரி இலாபம் **(ஆ) சாதாரண இலாப விகிதம்**

(இ) எதிர் நோக்கும் இலாபவிகிதம் (ஈ) இவைகளில் எதுவுமில்லை

25. சராசரி இலாபம் = ₹ 25,000 மற்றும் சாதாரண இலாபம் = ₹ 15,000 ஆக இருக்கும் போது உயர் இலாபம் எவ்வளவு? *[July 22, MAR 26]*

(அ) ₹ 25,000 (ஆ) ₹ 35,000 **(இ) ₹ 10,000** (ஈ) ₹ 15,000

26. ஒரு வியாபாரத்தின் மொத்த மூலதன மதிப்பு ₹ 10,00,000, மொத்த சொத்துகள் ₹ 15,00,000, பொறுப்புகள் ₹ 8,00,000 எனில், மூலதனமாக்கல் முறையில் நற்பெயரின் மதிப்பு.

[June 22, June 25, MAR 26]

(அ) ₹ 40,000 (ஆ) ₹ 70,000 (இ) ₹ 1,00,000 **(ஈ) ₹ 30,000**

27. பின்வரும் வாக்கியங்களில் எது சரியானது?

(அ) நற்பெயர் ஒரு புலனாகாச் சொத்து (ஆ) நற்பெயர் ஒரு நடப்புச் சொத்து

(இ) நற்பெயர் ஒரு கற்பனைச் சொத்து (ஈ) நற்பெயரினை வாங்க முடியாது

28. உயர் இலாபத்தைக் கணக்கிடும் சூத்திரம் எது? *[Jun 24, MAR 25]*

(அ) உயர் இலாபம் = மொத்த இலாபம் / ஆண்டுகளின் எண்ணிக்கை

(ஆ) உயர் இலாபம் = கூட்டு இலாபம் / ஆண்டுகளின் எண்ணிக்கை

(இ) உயர் இலாபம் = சராசரி இலாபம் – சாதாரண இலாபம்

(ஈ) உயர் இலாபம் = சராசரி இலாபம் × கொள்முதல் ஆண்டுகள்

29. மறுமதிப்பீட்டுக் கணக்கு ஒரு *[June 25]*

(அ) சொத்துக் கணக்கு **(ஆ) பெயரளவு கணக்கு**

(இ) ஆள்சார் கணக்கு (ஈ) ஆள்கூறாக்க கணக்கு

30. மறுமதிப்பீட்டில் சொத்துகளின் மதிப்பு உயர்வது *[July 22, MAR 26]*

(அ) ஆதாயம் (ஆ) நட்டம் (இ) செலவு (ஈ) இவற்றுள் எதுவுமில்லை

31. கூட்டாளியின் புதிய இலாபப்பகிர்வை விட பழைய இலாபப்பகிர்வு அதிகமாக இருந்தால் அவ்வேறுபாடு அழைக்கப்படுவது: *[MAR 26]*

(அ) முதல் விகிதம் **(ஆ) தியாக விகிதம்** (இ) ஆதாய விகிதம் (ஈ) இவற்றுள் எதுவுமில்லை

32. கூட்டாளி சேர்ப்பின்போது புதிய கூட்டாளி நற்பெயருக்காக கொண்டு வரும் தொகை, யாருடைய முதல் கணக்கில் வரவு வைக்கப்படவேண்டும்? *[MAR 25]*

(அ) அனைத்து கூட்டாளிகள் (ஆ) பழைய கூட்டாளிகள்

(இ) புதிய கூட்டாளி **(ஈ) தியாகம் செய்த கூட்டாளிகள்**

33. கூட்டாளி சேர்ப்பின் போது சொத்துகள் மற்றும் பொறுப்புகளை மறுமதிப்பீடு செய்யும் போது ஏற்படும் இலாபம் அல்லது நட்டம் யாருடைய முதல் கணக்கிற்கு மாற்றப்படுகிறது? *[June 24]*

(அ) பழைய கூட்டாளிகள் (ஆ) புதிய கூட்டாளி

(இ) அனைத்து கூட்டாளிகள் (ஈ) தியாகம் செய்த கூட்டாளிகள்

34. பொருத்துக: *[June 25]*

பட்டியல் I	பட்டியல் II
(i) தியாக விகிதம்	1. முதலீட்டு மாறுபடும் நிதி
(ii) பழைய இலாபப்பகிர்வு விகிதம்	2. பகிர்ந்துதரா இலாபம்
(iii) மறுமதிப்பீட்டுகணக்கு	3. நற்பெயர்
(iv) முதல் கணக்கு	4. பதிவுறா பொறுப்பு

குறியீடுகள்: (அ) 1 2 3 4 **(ஆ) 3 2 4 1** (இ) 4 3 2 1 (ஈ) 3 1 2 4

35. ஜேம்ஸ் மற்றும் கமல் இலாப நட்டங்களை 5:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றனர். அவர்கள் சுனில் என்பவரை 1/5 இலாப பங்கிற்கு கூட்டாளியாக சேர்த்துக் கொண்டனர். தியாக விகிதத்தை கணக்கிடவும்: *[MAR 24]*

(அ) 1:3 (ஆ) 3:1 **(இ) 5:3** (ஈ) 3:5

36. கூலிக் கணக்கு பின்வரும் எந்த தலைப்பின் கீழ் வரும்? *[MAR 2026]*

(அ) மறைமுக வருமானங்கள் (ஆ) நேரடி வருமானங்கள்

(இ) மறைமுக செலவினங்கள் **(ஈ) நேரடி செலவினங்கள்**

37. பொருந்தாத ஒன்றை தேர்ந்தெடுக்கவும்: *[MAR 2025]*

(அ) மறுமதிப்பீட்டு இலாபம் (ஆ) முதலீட்டு மாறுபடும் நிதி

(இ) புதிய கூட்டாளி கொண்டு வந்த நற்பெயர் (ஈ) பகிர்ந்தளிக்கப்படாத நட்டம்

38. பொருந்தாத ஒன்றை தெரிவு செய்க: *[MAR 2025]*

(அ) முதல் மீது வட்டி – பிரிவு 13(அ) (ஆ) கூட்டாளிகளின் ஊதியம் – பிரிவு 13(ஆ)

(இ) எடுப்பு மீது வட்டி – பிரிவு 13(ஈ) (ஈ) இலாபப் பகிர்வு விகிதம் – பிரிவு 13(இ)

39. பொறுப்புகளைக் காட்டிலும் மிகுதியாக உள்ள சொத்துகள்: *[MAR 2025]*

(அ) நட்டம் (ஆ) ரொக்கம் (இ) இலாபம் **(ஈ) முதல்**

40. பின்வருவனவற்றில் எது நிதி அறிக்கை பகுப்பாய்வின் பயன்பாடு அல்ல? *[MAR 2025]*

(அ) நிறுவனத்தின் நிதியியல் திட்டமிடுதல்

(ஆ) நிறுவனத்தின் நீர்மைத்தன்மை மற்றும் கடன் தீர்க்கும் திறன்

(இ) நிறுவனத்தின் நிதித்திட்ட பட்டியல் தயாரித்தல்

(ஈ) நிறுவனத்தின் கடன் பெறும் தன்மையை மதிப்பிடுவது

41. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கில் பதிவு செய்யப்படும் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள்: *[JUNE 25]*

(அ) வருவாயினத் தன்மை மட்டும் உடையது (ஆ) முதலினத்தன்மை மட்டும் உடையது

(இ) வருவாயினம் மற்றும் முதலினத்தன்மை உடையது (ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

42. விலகும் கூட்டாளியின் கடன் கணக்கு தோன்றுவது: *[JUNE 25]*

(அ) இருப்புநிலைக் குறிப்பில் சொத்துகள் பக்கம் (ஆ) மறுமதிப்பீட்டுக் கணக்கில் பற்று பக்கம்

(இ) இருப்புநிலைக் குறிப்பில் பொறுப்புகள் பக்கம் (ஈ) மறுமதிப்பீட்டுக் கணக்கில் வரவு பக்கம்

43. சுப்ரீம் நிறுமம் பங்கொன்று ₹ 10 மதிப்புடைய 100 பங்குகளை இறுதி அழைப்புத் தொகை பங்கொன்றுக்கு ₹ 2 செலுத்தாததால் ஒறுப்பிழப்பு செய்தது. அவை அனைத்தும் பங்கொன்று ₹ 9 வீதம் மறுவெளியீடு செய்யப்பட்டன. முதலினக் காப்பு கணக்கிற்கு மாற்றப்பட வேண்டிய தொகை எவ்வளவு? *[JUNE 25]*

(அ) ₹ 700 (ஆ) ₹ 800 (இ) ₹ 900 (ஈ) ₹ 1,000

44. கணக்கேடுகளில் பதிவு செய்யப்படாத நற்பெயர்: *[MAR 2024]*

(அ) தன்னுருவாக்கப்பட்ட நற்பெயர் (ஆ) பெறப்பட்ட நற்பெயர்

(இ) வாங்கப்பட்ட நற்பெயர் (ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

45. பொருந்தாத இணையைத் தேர்ந்தெடுக்கவும்: *[MAR 2025]*

(அ) பழைய விளையாட்டுப் பொருள்கள் விற்றது – முதலின வரவு

(ஆ) பொது நன்கொடை – வருவாயின வரவு

(இ) பில்லியார்ட்ஸ் சந்தா – வருவாயின வரவு

(ஈ) குறிப்பிட்ட நன்கொடை – முதலின வரவு

46. சரியற்ற இணையினை அடையாளம் காணவும்: *[MAR 2024]*

(அ) ஆண்டுத்தொகை முறையில் நற்பெயர் = சராசரி இலாபம் × ஆண்டுத் தொகை காரணியின் தற்போதைய மதிப்பு

(ஆ) சராசரி இலாப முறையில் நற்பெயர் = சராசரி இலாபம் × கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

(இ) கூட்டு சராசரி இலாபமுறையில் நற்பெயர் = கூட்டு சராசரி இலாபம் × கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

(ஈ) உயர் இலாப முறையில் நற்பெயர் = உயர் இலாபம் × கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

47. உரிமையாளரின் சொத்துகள் ₹ 85,000 மற்றும் பொறுப்புகள் ₹ 21,000 எனில், அவருடைய முதல் தொகை: *[MAR 2024]*

(அ) ₹ 21,000 (ஆ) ₹ 85,000 **(இ) ₹ 64,000** (ஈ) ₹ 1,06,000

48. Tally–ல் இருந்து வெளியேறுவதற்குப் பயன்படுத்தும் சாவி (key): *[MAR 2024]*

(அ) Ctrl + Q (ஆ) Ctrl + P **(இ) Esc** (ஈ) Ctrl + X

49. விற்பனை மூலம் பெற்ற வருவாய் ₹ 4,00,000, விற்பனை மூலம் பெற்ற வருவாய்க்கான அடக்கவிலை ₹ 1,50,000, நிர்வாகச் செலவுகள் ₹ 50,000, விற்பனைச் செலவுகள் ₹ 8,500 எனில், நிகர இலாபம். *[MAR 25]*

(அ) ₹ 1,91,500 (ஆ) ₹ 4,00,000 (இ) ₹ 2,00,000 (ஈ) ₹ 1,50,000

50. நிறுமம் ₹ 10 மதிப்புள்ள 50,000 நேர்மைப் பங்குகளை பங்கொன்றுக்கு ₹ 3 வீதம் முனைமத்தில் வெளியிட்டது. முனைமத்தொகை எவ்வளவு? *[July 22]*

(அ) ₹ 1,00,000 (ஆ) ₹ 50,000 **(இ) ₹ 1,50,000** (ஈ) ₹ 2,00,000

51. கூட்டாளி விலகலின் போது பொதுகாப்பு மாற்றப்படுவது. [Mar 23, June 24 & Mar 26]

அ) அனைத்துக் கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கு

ஆ) மறுமதிப்பீடு கணக்கிற்கு

இ) தொடரும் கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கு

ஈ) நினைவுக் கறிப்பு மறுமதிபீடு கணக்கிற்கு.

52. மறுமதிப்பீட்டின் போது பொறுப்புகளின் அதிகரிப்புத் தருவது. [Jun 25 & Mar 26]

அ) ஆதாயம் **ஆ) நட்டம்** இ) இலாபம் ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

53. விலகும் கூட்டாளிக்குரிய தீர்வுத் தொகை உடனடியாக செலுத்தாத போது, அது மாற்றப்படும் கணக்கு. [Mar 23, Jun 24 & Mar 25]

அ) வங்கிக் க/கு ஆ) விலகும் கூட்டாளின் முதல் க/கு

இ) விலகும் கூட்டாளியின் கடன் க/கு ஈ) பிற கூட்டாளிகளின் முதல் க/கு

54. கூட்டாண்மை நிறுவனத்தில் இருந்து கூட்டாளி விலகும் போது பகிர்ந்து தரா இலாபங்கள் மற்றும் நட்டங்கள் கூட்டாளிகளுக்கு இந்த அடிப்படையில் பகிரப்படுகிறது. [Mar 24]

அ) புதிய இலாபப் பகிர்வு விகிதம் ஆ) தியாக விகிதம்

இ) பழைய இலாபப்பகிர்வு விகிதம் ஈ) ஆதாய விகிதம்

55. கூட்டாளி ஒருவர் ஜூன் 30 அன்று கூட்டாண்மை நிறுவனத்திலிருந்து விலகுகிறார். அவர் கூட்டாண்மை நிறுவனத்தின் அனைத்து செயல்களுக்கும் பொறுப்பாவது. [Mar 26]

அ) நடப்புக் காண்டின் இறுதி வரைக்கும் ஆ) முந்தைய கணக்காண்டின் இறுதி வரைக்கும்

இ) கூட்டாளி விலகும் நாள் வரைக்கும் ஈ) கூட்டாளி கணக்கை தீர்வு செய்யும் வரைக்கும்

56. A, B மற்றும் C என்ற கூட்டாளிகள் 4:2:3 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தைப் பகிர்ந்து வந்தனர். தற்போது C விலகுகிறார். A மற்றும் B யின் புதிய இலாபப் பகிர்வு விகிதம்.[Jul 22, Mar 23 & Mar 25]

அ) 4:3 ஆ) 3:4 **இ) 2:1** ஈ) 1:2

57. A, B மற்றும் C என்ற கூட்டாளிகள் 2:2:1 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தைப் பகிர்ந்து வந்தனர். Bயின் விலகலின் போது நிறுவனத்தின் நற்பெயர் ₹ 30,000 என மதிப்பிடப்பட்டது. கூட்டாளி Bக்கு ஈடுசெய்வதற்கு A மற்றும் C யின் பங்களிப்பைக் கண்டறியவும். [Mar 24 & Jun 25].

அ) ₹ 20000 மற்றும் ₹ 10000 ஆ) ₹ 10000 மற்றும் ₹ 120000

இ) ₹ 8000 மற்றும் ₹ 4000 ஈ) ₹ 15000 மற்றும் ₹ 15000

58. ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளியாக இருந்த A என்பவர் 2019 மார்ச் 31 அன்று இறந்து விட்டார். அவருக்குச் செலுத்த வேண்டிய தொகை ₹ 25000 உடனடியாகச் செலுத்தப்படவில்லை. அது மாற்றவேண்டிய கணக்கு.

அ) A–ன் முதல் க/கு ஆ) A–ன் கடன் க/கு

இ) A–ன் நிறைவேற்றாளர் க/கு **ஈ) A–ன் நிறைவேற்றாளரின் கடன் க/கு**

59. முக மதிப்பை விட அதிகமாகப் பெற்ற தொகை வரவு வைக்கப்படும் க/கு. [Mar 24 & Mar 26]

அ) பங்கு முதல் க/கு **ஆ) பத்திர முனைமக் க/கு**

இ) பங்கு ஒறுப்பிழப்புக் க/கு ஈ) அழைப்பு முன்பணக் க/கு.

60. ஒறுப்பிழப்பு செய்த பங்குகளை மறு வெளியீடு செய்த பிறகு பங்கு ஒறுப்பிழப்புக் கணக்கின் இருப்பு மாற்றப்டுவது. [Mar 23, Jun 24 & Jun 25]

அ) பொதுக் காப்புக் கணக்கிற்கு அ) உபரி கணக்கிற்கு

இ) முதலின காப்புக் கணக்கிற்கு ஈ) பத்திர முனைமக் கணக்கிற்கு

61. ₹ 8 செலுத்தப்பட்ட ₹ 10 மதிப்புள்ள பங்கு பொறுப்பிழப்பு செய்யப்பட்டதெனில், அதன் குறைந்த அளவு மறு வெளியீட்டு விலை. [Mar 26]

அ) பங்கொன்று ₹ 10 ஆ) பங்கொன்று ₹ 8

இ) பங்கொன்று ₹ 5 **ஈ) பங்கொன்று ₹ 2**

62. சொத்துகளை வாங்கி பங்குகள் வெயியிடும் போது வரவு வைக்கப்டும் க/கு.[Jun 24 & Mar 25]

அ) விற்பனையாளர் க/கு ஆ) பற்பல சொத்துக் க/கு

இ) பங்கு முதல் க/கு ஈ) வங்கிக் க/கு

63. நிறுமக் கலைப்பின் போது மட்டுமே அழைக்கப்படக் கூடிய பங்கு முதலின் ஒரு பகுதி, இவ்வாறு அழைக்கப்படுகிறது. [Mar 24]

அ) அங்கிகரிக்கப்பட்ட முதல் ஆ) அழைக்கப்பட்ட முதல்

இ) முதலினக் காப்பு **ஈ) காப்பு முதல்.**

64. ஒறுப்பிழப்பு செய்யும் போது பங்கு முதல் கணக்கு எதில் பற்று வைக்கப்படுகிறது?

அ) முகமதிப்பு ஆ) பெயரளவு மதிப்பு

இ) செலுத்தப்பட்ட தொகை **ஈ) அழைக்கப்பட்ட தொகை**

65. நிதி எனும் சொல் குறிப்பிடுவது. [Mar 23, Jun 25 & Mar 26]

அ) நடப்புப் பொறுப்புகள் **ஆ) நடைமுறை முதல்**

இ) நிலைச் சொத்துகள் ஈ) நீண்டகால சொத்துகள்

66. ஒரு பொது அளவு இருப்புநிலைக் குறிப்பில் நீண்ட கால சொத்துகளின் சதவீதம் 75 எனில் நடப்புச் சொத்துகளின் சதவீதம் எவ்வளவு? [Jun 25]

அ) 175 ஆ) 125 **இ) 25** ஈ) 100

67. ஒரு வரையறு நிறுமத்தின் விற்பனை ₹ 1,25,000 லிருந்து ₹ 1,50,000க்கு அதிகரித்துள்ளது. இது ஒப்பீட்டு வருமான அறிக்கையில் எவ்வாறு தோன்றுகிறது? [Mar 26]

அ) +20% ஆ) +120% இ) −120% ஈ) −20%

68. பின்வருவனவற்றில் எது நிதிநிலைப் பகுப்பாய்வின் ஒரு கருவியல்ல? [Mar 24 & Mar 25]

அ) போக்குப்பகுப்பாய்வு ஆ) ஒப்பீட்டு அறிக்கை

இ) பொது அளவு அறிக்கை **ஈ) நிர்ணயிக்கப்பட்ட அடக்கவிலை**

69. இருப்புநிலைக் குறிப்பு, வணிக நிறுவனத்தின் நிதிநிலை பற்றிய ____ தகவல்களை வழங்குகிறது.

அ) ஒரு காலகட்டத்திற்கு மேலான **ஆ) ஒரு குறிப்பிட்ட நாளுக்குரிய**

இ) ஒரு குறிப்பிட்ட காலத்திற்கான ஈ) குறிப்பிட்ட கணக்காண்டிற்குரிய

70. அலுவலகப் பயன்பாட்டிற்காக ₹ 25,000 வங்கியிலிருந்து எடுக்கப்பட்டது. எந்த வகை சான்றாவணத்தில் இந்த நடவடிக்கை பதியப்படும்? [Mar 24]

அ) எதிர்பதிவு சான்றாவணம் ஆ) பெறுதல் சான்றாவணம்

இ) செலுத்துதல் சான்றாவணம் ஈ) விற்பனை சான்றாவணம்

71. ஒரு நிறுமத்தின் நீர்மைத்தன்மையைக் குறிக்க கீழ்க்கண்ட எந்த விகிதங்கள் பயன்படுகிறது?

(i) விரைவு விகிதம் (ii) நிகர இலாப விகிதம் *[June 25, MAR 24]*

(iii) புற அக பொறுப்புகள் விகிதம் (iv) நடப்பு விகிதம்

அ) (i) மற்றும் (ii) **ஆ) (i) மற்றும் (iv)** இ) (ii) மற்றும் (iii) ஈ) (ii) மற்றும் (iv)

72. ஒரு இனம் மற்றொரு இனத்தோடு பெற்றிருக்கும் தொடர்பினை கணிதவியல் ரீதியாக வெளிப்படுத்துவது: *[June 25, MAR 26]*

(அ) விகிதம் (ஆ) மாதிரி (இ) தீர்மானம் (ஈ) ஒப்பீடு

73. புற அக பொறுப்புகள் விகிதம் அளவிடுவது: *[MAR 26]*

(அ) குறுகிய காலக்கடன் தீர்க்கும் திறன் (ஆ) செயல்திறன்

(இ) நீண்டகாலக் கடன் தீர்க்கும் திறன் (ஈ) இலாபம் ஈட்டும் திறன்

74. பட்டியல் ஒன்றினை பட்டியல் இரண்டுடன் பொருத்தி கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டைப் பயன்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: *[MAR 25]*

பட்டியல் I	பட்டியல் II
(i) நடப்பு விகிதம்	1. நீர்மைத்தன்மை
(ii) நிகர இலாபவிகிதம்	2. செயல்திறன்
(iii) புறஅக பொறுப்புகள் விகிதம்	3. நீண்டகால கடன் தீர்க்கும் திறன்
(iv) சரக்கிருப்பு சுழற்சி விகிதம்	4. இலாபத்தன்மை

குறியீடுகள்:	(i)	(ii)	(iii)	(iv)
(அ)	**1**	**4**	**3**	**2**
(ஆ)	3	2	4	1
(இ)	4	3	2	1
(ஈ)	1	2	3	4

75. பங்குதாரர் நிதிக்கும் மொத்த சொத்துகளுக்கும் உள்ள விகிதாச்சாரம் [Jul 22]

அ) உரிமையாளர் விகிதம் ஆ) முதல் உந்துதிறன் விகிதம்

இ) புற அக பொறுப்பு விகிதம் ஈ) நடப்பு விகிதம்

76. நடப்பு விகிதம் காட்டுவது.

அ) குறுகிய காலக் கடன் தீர்க்கும் திறன் ஆ) மேலாண்மைத் திறன்

இ) இலாபம் ஈட்டும் திறன் ஈ) நீண்ட காலக் கடன் தீர்க்கும் திறன்.

77. நடப்புப் பொறுப்பு ₹ 40,000 , நடப்பு சொத்து ₹ 1,00,000 , சரக்கிறுப்பு ₹ 20,000 எனில் விரைவு விகிதம்.

அ) 2 : 1 ஆ) 2.5 : 1 இ) 1 : 1 ஈ) 1 : 2

78. ஒரு நிறுமத்தின் நீர்மைத்தன்மையை சோதிக்க கீழ்க்கண்ட எந்த விகிதங்கள் பயன்படுகிறது?

1) விரைவு விகிதம் 2) நடப்பு விகிதம்

3) நிகர இலாப விகிதம் 4) புற அக பொறுப்பு விகிதம்

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டைப் பயன்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

அ) 1 மற்றும் 2 ஆ) 1 மற்றும் 4 இ) 2 மற்றும் 3 ஈ) 2 மற்றும் 4

79. F11 எனும் பயன்பாடு? *[MAR 26, JUN 25]*

(அ) கணக்கியல் சான்றாவணங்கள் (ஆ) நிறுவன கட்டமைப்பு

(இ) நிறுவனப் பண்புக் கூறுகள் (ஈ) இவைகளில் ஏதுமில்லை

80. Tally–யின் நுழைவாயிலிலிருந்து இருப்புநிலைக் குறிப்பை பார்வையிட எந்த விருப்பத் தேர்வு பயன்படும்? *[June 25]*

(அ) Gateway of Tally –> Reports –> Trial Balance (ஆ) Gateway of Tally –> Trial Balance

(இ) Gateway of Tally –> Reports –> Display –> Trial Balance (ஈ) இவைகளில் எதுவுமில்லை

81. எதிர்ப்பதிவு சான்றாவணம் (Contra Voucher) எதற்காகப் பயன்படுகிறது? *[MAR 25]*

(அ) தலைமைப்பதிவு **(ஆ) அலுவலக பயன்பாட்டிற்காக வங்கியிலிருந்து எடுத்த ரொக்கம்**

(இ) அறிக்கைகள் (ஈ) சொத்துகள் கடனுக்கு வாங்கியது

82. Tally–ல் எது முன்கூட்டியே வரையறுக்கப்படாத குழு? *[MAR 25]*

(அ) விற்பனை க/கு (ஆ) அனாமத்து க/கு

(இ) முதலீடுகள் க/கு **(ஈ) கொடுபடவேண்டிய செலவுகள் க/கு**

83. அறைகலன் கடனுக்கு வாங்கியதை Tally–ல் எந்த வகை சான்றாவணத்தில் பதியப்படும்? *[May 22]*

(அ) பெறுதல்கள் சான்றாவணம் **(ஆ) உரிய குறிப்பேடு சான்றாவணம்**

(இ) கொள்முதல் சான்றாவணம் (ஈ) செலுத்தல்கள் சான்றாவணம்

84. பயனரின் தேவைக்கேற்ப தயாரிக்கப்படும் கணக்கியல் அறிக்கையானது: *[JUN 24]*

(அ) வழக்கமான கணக்கியல் அறிக்கை **(ஆ) குறிப்பிட்ட நோக்க அறிக்கை**

(இ) இருப்பாய்வு (ஈ) இருப்புநிலைக்குறிப்பு

85. Tally-ல் முன்பே வரையறுக்கப்பட்ட பேரேடுகள்: *[July 2022]*

(i) ரொக்கம் (ii) இலாப நட்டக் க/கு (iii) முதல் க/கு

அ) (i) மட்டும் ஆ) (ii) மட்டும்

(இ) (i) மற்றும் (ii) இவை இரண்டும் ஈ) (ii) மற்றும் (iii) இவை இரண்டும்

இரண்டு மதிப்பெண் வினாக்கள்

1. முழுமை பெறா பதிவேடுகள் என்றால் என்ன? [Jul 2022]

இரட்டைப் பதிவு முறையின் படி பராமரிக்கப்படாத பதிவேடுகள் அனைத்தும் முழுமை பெறா பதிவேடுகள் எனப்படும்.

2. நிலை அறிக்கை என்றால் என்ன? (March 2026)

நிலையறிக்கை என்பது குறிப்பிட்ட நாளுக்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் இருப்பைக் காட்டும் ஒரு அறிக்கையாகும்.

3. இரட்டைப்பதிவு முறை பின்பற்றாத போது சிறிய அளவிலான தனி வணிகர் பொதுவாக பராமரித்து வரும் கணக்குகளைத் தருக. (Jun 2024)

(i) ரொக்க கணக்கு, (ii) ஆள்சார் கணக்கு

4. முழுமை பெறா பதிவேடுகளின் இயல்புகளில் எவையேனும் இரண்டினை தரவும். [Jun 2023]

- நிதிநிலை அறிக்கைகள் உண்மையான மற்றும் நேர்மையான நிதிநிலையை வெளிப்படுத்தாது.
- வியாபார நடவடிக்கைகளுடன் உரிமையாளரின் நடவடிக்கைகளும் பதியப்படுதல்.

5. இலாப நோக்கமற்ற அமைப்பின் வருவாயின செலவுகள் ஏதேனும் நான்கினைத் தரவும். [Mar-23]

மதிப்பூதியம், (ii) அறக்கொடை, (iii) தணிக்கைக் கட்டணம், (iv) அச்சு மற்றும் எழுதுபொருள்.

6. ஆயுள் உறுப்பினர் கட்டணம் சிறு குறிப்பு வரைக. [Jun 23]

உறுப்பினர்களிடமிருந்து பெறப்படும் ஆயுள் உறுப்பினர் கட்டணம் ஒரு முதலின வரவாகும்.

7. உயில் கொடை என்றால் என்ன? (June 2025, June 2026)

இலாப நோக்கற்ற அமைப்பிற்கு உயில் மூலமாக அளிக்கப்படும் பரிசு உயில்கொடை ஆகும்.

8. இலாப நோக்கமற்ற அமைப்பின் முதலின வரவுகளுக்கு ஏதேனும் நான்கு எடுத்துக்காட்டுகளை தரவும். [Jul 22]

i) ஆயுள் உறுப்பினர் கட்டணம், ii) உயில் கொடை, iii) சிறப்பு நிதி, iv) பரிசு நிதி

9. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு என்றால் என்ன?

இலாப நோக்கற்ற அமைப்பில் ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியில் தயாரிக்கப்படும் ரொக்கம் மற்றும் வங்கி நடவடிக்கைகளின் தொகுப்பு ஆகும்.

10. இலாப நோக்கமற்ற அமைப்பின் பொருள் தரவும். [Jun 24]

இலாபம் ஈட்டும் நோக்கத்திற்காக அல்லாமல் பொதுமக்களுக்கு சேவை செய்யும் நோக்கத்திற்காக செயல்படும் அமைப்புகள் இலாப நோக்கமற்ற அமைப்புகள் என்று அழைக்கப்படுகின்றன.

11. இலாப நோக்கற்ற அமைப்பில் ரொக்கம் சாரா நடவடிக்கைகளுக்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக. [Mar 25]

தேய்மானம், (ii) கொடுபட வேண்டிய செலவுகள்.

12. கூட்டான்மை ஒப்பாவணம் என்றால் என்ன? (Jun 23 & March 2025)

கூட்டான்மை ஒப்பாவணம் என்பது கூட்டாளிகளுக்கு இடையேயான உடன்படிக்கையின் விதிகளை உள்ளடக்கிய எழுத்து வடிவிலான ஒரு ஆவணம் ஆகும்.

13. நிலை முதல் முறை என்றால் என்ன ?(Jun 25 & March 2026)

நிலை முதல் என்பது கூட்டாளிகளின் முதல் மாறாமல் இருக்கும் மற்றும் நிலையானதாக இருக்கும்.

14. கூட்டான்மை நிறுவனங்களால் தயாரிக்கப்படும் இறுதிக் கணக்குகளின் பெயர்களை கூறுக. [Mar 24]

- வியாபார மற்றும் இலாப நட்ட கணக்கு,
- இலாப நட்ட பகிர்வு கணக்கு, இருப்பு நிலை குறிப்பு.

15. உயர் இலாபம் என்றால் என்ன? (May 22 & March 2026)

சாதாரண இலாபத்தை விட கூடுதலாக உள்ள சராசரி இலாபம் உயர் இலாபம் ஆகும்.

16. நற்பெயர் என்றால் என்ன? [Mar 24]

ஒரு தொழிலுக்கு நன்மை தரக்கூடிய அத்தொழிலின் புகழ் அல்லது நன்மதிப்பு நற்பெயர் ஆகும்.

17. வாங்கப்பட்ட நற்பெயர் என்றால் என்ன? (Jun 24 & March 2025)

நற்பெயரானது ரொக்கம் அல்லது பொருளைச் செலுத்தி பெறப்பட்டிருந்தால் அது வாங்கப்பட்ட நற்பெயர் என்று அழைக்கப்படுகின்றது.

18. கூட்டான்மை நிறுவனத்தின் நற்பெயரை மதிப்பிடும் ஏதேனும் இரண்டு சூழ்நிலைகளைத் தரவும். [Mar 23]

- கூட்டான்மை நிறுவனத்தில் புதிய கூட்டாளி சேர்க்கப்படும் போது.
- ஒரு கூட்டான்மை நிறுவனத்தை கலைக்கும் போது.

19. சாதாரண இலாப விகிதம் என்றால் என்ன? (Jul 22 & June 23)

ஒரே தன்மையுடைய வியாபார நிறுவனங்கள் சாதாரண சூழ்நிலைகளில் ஈட்டும் இலாப விகிதம் சாதாரண இலாப விகிதம் ஆகும்.

20. புதிய கூட்டாளி சேர்க்கையின் போது பகிர்ந்து தரா இலாபங்கள் மற்றும் நட்டங்கள் எவ்வாறு கூட்டாளிகளுக்கு பகிர்ந்து அளிக்கப்படுகிறது? [Jun 23]

பகிர்ந்து தரா காப்புகள், இலாபங்கள் அல்லது நட்டங்கள் பழைய கூட்டாளிகளுக்கு பழைய இலாப விகிதத்தில் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும்.

21. தியாக விகிதம் என்றால் என்ன? [May 22]

தியாக விகிதம் என்பது பழைய கூட்டாளிகள் தங்கள் இலாபத்தில் ஒரு விகிதத்தை புதிய கூட்டாளிக்கு விட்டுக் கொடுப்பதே ஆகும்.

22. கூட்டாளி சேர்ப்பின் போது மேற்கொள்ள வேண்டிய சரிகட்டுதல்கள் யாவை? ஏதேனும் இரண்டு [Jun 25]

- புதிய இலாப விகிதம் மற்றும் தியாக விகிதத்தை கணக்கிடுதல்
- நற்பெயர் சரிகட்டுதல்
- முதல் கணக்கை சரிகட்டுதல்

23. சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை மறுமதிப்பீடு செய்தல் என்றால் என்ன? [Mar 26]

சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் நடப்பு மதிப்பை தீர்மானிப்பது மறுமதிப்பீடு எனப்படுகிறது.

24. கூட்டாளி விலகல் என்றால் என்ன? (May 22 & March 25)

கூட்டான்மை நிறுவனத்திலிருந்து கூட்டாளி ஒருவர் வெளியே சென்றால் அது கூட்டாளி விலகல் எனப்படும்.

25. ஆதாய விகிதம் என்றால் என்ன? [Jul 22]

ஆதாய விகிதம் என்பது தொடரும் கூட்டாளிகளுக்கு கிடைக்கப்பெற்ற இலாபத்தின் விகிதாச்சாரம் ஆகும்.

26. ஆதாய விகிதம் கணக்கிடுவதன் நோக்கம் என்ன? [Jun 25]

ஆதாய விகிதம் கணக்கிடுவதன் நோக்கம் விலகும் கூட்டாளிகளுக்கு கொடுக்கப்படும் நற்பெயரை ஏற்றுக் கொள்வதாகும்.

27. மிகை ஒப்பம் என்றால் என்ன? (Mar 23, June 24 & March 25)

வெளியிடப்பட்ட பங்குகளின் எண்ணிக்கையை விட விண்ணப்பிக்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்தால் அது மிகை ஒப்பம் ஆகும்.

28. பங்குகள் ஏன் ஒறுப்பிழப்பு செய்யப்படுகின்றன? (March 24 & March 2026)

பங்குதாரர் ஒருவர் ஒதுக்கீட்டு பணத்தையோ அல்லது அழைப்புப் பணத்தையோ செலுத்த தவறினால் அவருடைய பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்படும்.

29. அழைப்பு நிலுவை என்பதன் பொருள் என்ன? [Jun 26]

பங்குதாரர் ஒருவர் தான் செலுத்த வேண்டிய அழைப்புத் தொகையை அழைக்கப்படும் செலுத்தப்படாமல் உள்ள தொகை அழைப்பு நிலுவை எனப்படும்.

30. நிதிநிலை அறிக்கைகள் யாவை? [March 25]

ஒரு கணக்காண்டின் இறுதியில் வியாபாரத்தின் இயக்க முடிவுகள் மற்றும் நிதி நிலையை அறிந்து கொள்ள தயாரிக்கப்படும் அறிக்கைகளே நிதிநிலை அறிக்கைகள் ஆகும்.

31. நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வின் கருவிகளை பட்டியலிடவும். (Jun 23, Jun 24 & Jun 26)

ஒப்பீட்டு அறிக்கை, பொது அளவு அறிக்கைகள், போக்குப் பகுப்பாய்வு, நிதி ஓட்டப் பகுப்பாய்வு, ரொக்க ஓட்டப் பகுப்பாய்வு.

32. நடைமுறை முதல் என்றால் என்ன? (Jul 22, Mar 2024 & June 2026)

நடைமுறை முதல் என்பது நடப்புப் பொறுப்புக்களை விட அதிகமாக உள்ள நடப்புப் சொத்துக்களைக் குறிப்பதாகும்.

33. விரைவு விகிதம் என்றால் என்ன? (March 23 & March 2026)

நீர்மைச் சொத்துக்களுக்கும், நடப்பு பொறுப்புகளுக்கும் உள்ள விகிதாச்சாரம் விரைவு விகிதம் ஆகும்.

34. கணக்கியல் அறிக்கைகள் என்றால் என்ன? (Jun 23, June 2024 & March 2025)

கணக்கியல் அறிக்கையானது ஒரு நிறுவனத்தின் கணக்கெடுகளில் இருந்து பெறப்பட்ட கணக்கியல் தகவல் தொகுப்பாகும்.

35. ஏதேனும் ஐந்து கணக்கியல் அறிக்கைகளை கூறுக. [March 23]

i) குறிப்பேடு, (ii) பேரேடு, (iii) இருப்பாய்வு, (iv) இருப்பு நிலைக் குறிப்பு, (v) இலாப அறிக்கை.

36. தானியங்கும் கணக்கியல் முறை என்றால் என்ன? (May 22 & Mar 2024)

கணக்கியல் மென்பொருள் உதவியுடன் கணக்கேடுகளை பராமரிக்கும் அணுகுமுறையே தானியங்கி கணக்கில் முறையாகும்.

37. Tally ERP–9–ல் குழு என்றால் என்ன? (Jul 22 & June 26)

Tally–யில் குழு என்பது ஒரே பண்புகளைக் கொண்ட பேரேடுகளின் தொகுப்பு ஆகும்.

38. Tally ERP–9–ல் இருப்பாய்வை எவ்வாறு பார்வையிடுவது என்பதை விளக்கவும். [Mar 26]

Gateway of Tally > Reports > Display > Trial Balance > Alt F1 (detailed)

மூன்று மதிப்பெண் வினாக்கள்

1. முழுமை பெறா பதிவேடுகளின் குறைபாடுகள் யாவை? [March 25]

- பதிவேடுகள் முறையாக பராமரிக்கப்படாமல்
- இருப்பாய்வு தயாரிப்பது கடினம்
- தவறுகள் மற்றும் மோசடிகள் எளிதாக கண்டறிய முடியாது.

2. முழுமை பெறா பதிவேடுகளின் இயல்புகள் யாவை? (June 2025 & June 2026)

- **தன்மை**:
  இது நடவடிக்கைகளை அறிவியல் தன்மையற்ற மற்றும் ஒழுங்கற்ற முறையில் பதிவு செய்யும் ஒரு முறையாகும்.
- **பராமரிக்கப்படும் கணக்கின் வகைகள்**:
  ரொக்கம் மற்றும் ஆல்சார் கணக்குகள் மட்டுமே பராமரிக்கப்படுகின்றன.
- **சீரற்ற தன்மை** :
  நடவடிக்கைகளை பதிவு செய்வதில் சீரற்ற தன்மை காணப்படுகிறது.

3. இரட்டை பதிவு முறை மற்றும் முழுமை பெற பதிவேடுகளுக்கு இடையே உள்ள வேறுபாடுகள் யாவை? **[Mar 23]**

தலைப்பு	இரட்டை பதிவு முறை	முழுமை பெற பதிவேடுகள்
1. இருப்பாய்வு தயாரித்தல்	இருப்பாய்வு தயாரிக்க முடியும்	இருப்பாய்வு தயாரிப்பது கடினம்
2. நடவடிக்கைகளை பதிவு செய்தல்	பற்று மற்றும் வரவு ஆகிய இரு தன்மைகளும் பதிவு செய்யப்படுகின்றன	பற்று மற்றும் வரவு ஆகிய இரு தன்மைகளும் பதிவு செய்யப்படுவதில்லை
3. பொருந்தும் தன்மை	அனைத்து அமைப்புகளுக்கும் பொருந்தும்	சிறிய அளவிலான அமைப்புகளுக்கு மட்டும் பொருந்தும்

4. நிலை அறிக்கை மற்றும் இருப்பு நிலை குறிப்புகள் இடையே உள்ள வேறுபாடுகளை தரவும். [Mar 24]

அடிப்படை	நிலை அறிக்கை	இருப்பு நிலை குறிப்பு
நோக்கம்	வியாபாரத்தில் முதலை கண்டறிய தயாரிக்கப்படுகிறது	நிதி நிலையை கண்டறிய தயாரிக்கப்படுகிறது
நம்பகத்தன்மை	நம்பகத்தன்மை உடையதல்ல	நம்பகத்தன்மை உடையது
விடுபட்ட விவரங்கள்	விடுபட்ட விவரங்களை கண்டறிவது கடினம்	விடுபட்ட விவரங்களை கண்டறிவது எளிது

5. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிற்கும், வருவாய் மற்றும் செலவின கணக்கிற்கும் உள்ள வேறுபாடுகளை தரவும் [July 22]

அடிப்படை	பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு	வருவாய் மற்றும் செலவின கணக்கு
நோக்கம்	ரொக்கப் பெறுதல்கள் மற்றும் ரொக்கச் செலுத்துதல்களை அறிய தயாரிக்கப்படுகிறது	உபரி அல்லது பற்றாக்குறையை அறிய தயாரிக்கப்படுகிறது
கணக்கின் தன்மை	சொத்து கணக்கு	பெயரளவு கணக்கு
கணக்கியலின் அடிப்படை	ரொக்க அடிப்படையிலானது	நிகழ்வு அடிப்படையிலானது

6. இலாப நோக்கமற்ற அமைப்பில் கீழ்காணும் செலவுகள் முதலினமா அல்லது வருவாயினமா என வகைப்படுத்துக. [Mar 23]

- மதிப்பூதியம் – வருவாயினம்
- விளையாட்டு உபகரணம் வாங்குதல் – முதலினம்
- நூலகத்திற்கு புத்தகங்கள் வாங்குதல் – முதலினம்

7. கூட்டான்மை ஒப்பாவணத்தின் உள்ளடக்கங்கள் ஏதேனும் ஆறினைத் தரவும். (June 2023 & June 2025)

- நிறுவனத்தின் பெயர் மற்றும் இடம்
- தொழில் துவங்கிய நாள்
- கூட்டாளிகளின் பெயர் மற்றும் முகவரி
- ஒவ்வொரு கூட்டாளியும் அளித்த முதல்
- இலாப பகிர்வு விகிதம்
- முதல் மீது வட்டி வீதம்.

8. நற்பெயரை தீர்மானிக்கும் ஏதேனும் ஆறு காரணிகளை தரவும். [Mar 23]

- நிறுவனத்தின் இலாபம் ஈட்டும் திறன்
- திறமை மிகு மேலாண்மை
- போட்டியின் அளவு

9. கூட்டாளி சேர்க்கும் போது மேற்கொள்ள வேண்டிய சரிகட்டுதல்கள் யாவை? (May 22, June 23 & Mar 26)

- பகிர்ந்து தரா இலாபம், காப்பு மற்றும் நட்டம் ஆகியவற்றை பகிர்ந்து அளித்தல் .
- சொத்துக்களையும், பொறுப்புகளையும் மறுமதிப்பீடு செய்தல்.
- புதிய இலாப விகிதம் மற்றும் தியாக விகிதம் நிர்ணயித்தல்.
- நற்பெயர் சரிகட்டுதல் .
- முதல் கணக்கை புதிய இலாப விகிதத்தின் அடிப்படையில் சரிகட்டுதல்.

10. கூட்டாளி விலகலின் போது செய்யப்பட வேண்டிய சரிகட்டுதல்களை பட்டியலிடவும்.
(July 2022 & March 2024)

- பகிர்ந்து தரா இலாபங்கள், காப்புகள் மற்றும் நட்டங்களை பகிர்ந்து அளித்தல்.
- சொத்துக்களையும், பொறுப்புகளையும் மறுமதிப்பீடு செய்தல்.
- புதிய விகிதம் மற்றும் தியாக விகிதம் ஆகியவற்றை தீர்மானித்தல்.
- நற்பெயர் சரிகட்டுதல்.
- விலகும் கூட்டாளிக்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்துதல்.

11. தியாக விகிதத்திற்கும் ஆதாய விகிதத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?
(May 2022, June 2024 & March 2025)

அடிப்படை	தியாக விகிதம்	ஆதாய விகிதம்
1. பொருள்	புதிய கூட்டாளிக்கு, பழைய கூட்டாளிகள் தியாகம் செய்து கொடுக்கும் இலாப பங்கு.	தொடரும் கூட்டாளிகள் விலகும் கூட்டாளிகளிடமிருந்து பெறும் ஆதாய பங்கு.

2. கணக்கிடும் காலம்	புதிய கூட்டாளி சேர்ப்பின் போது கணக்கிடப்படுகிறது.	கூட்டாளி ஒருவர் விலகும் போது கணக்கிடப்படுகிறது.
3. கணக்கிடும் முறை	தியாக விகிதம் = பழைய இலாப விகிதம் – புதிய இலாப விகிதம்	ஆதாய விகிதம் = புதிய இலாப விகிதம் – பழைய இலாப விகிதம்

12. **வெளிச்செல்லும் கூட்டாளிகளுக்கு செலுத்த வேண்டிய தொகையினை எவ்வாறு தீர்வு செய்யலாம்?** **[June 2026]**
    - அவருக்கு சேர வேண்டிய முழு தொகையையும் ரொக்கமாக உடனடியாக செலுத்தலாம் .
    - மொத்த தொகையையும் கூட்டாளியின் கடன் கணக்கிற்கு மாற்றிவிடலாம் .
    - பாதி தொகையை உடனடியாக ரொக்கமாகவும், மீதி தொகையை கடன் கணக்கிற்கு மாற்றிவிடலாம்.

13. **அழைப்பு முன் பணம் குறித்து சுருக்கமாக எழுதவும். (Mar 2023 & June 3026)**
    - பங்கின் அழைக்கப்பட்ட மதிப்பை விட அதிகமாக பெறப்பட்ட தொகை அழைப்பு முன் பணமாகும்.
    - இது பங்கு விண்ணப்பம் அல்லது பங்கு ஒதுக்கீடு, பங்கு அழைப்பு கணக்கில் அதிகமாக பெறப்பட்ட தொகை ஆகும்.
    - அதிகமாக பெறப்பட்ட தொகை திருப்பி அளிக்க வேண்டும்.

14. **சிறு குறிப்பு வரைக (June 2024 & June 2025)**

    அங்கீகரிக்கப்பட்ட முதல் :
    - இது அமைப்பு முறையிட்டின் படி அங்கீகரிக்கப்பட்ட முதல் ஆகும்.
    - இது அதிகபட்சமாக முதலாக திரட்ட அனுமதிக்கப்பட்ட தொகை

    காப்பு முதல் :
    - ஒரு நிறுமம் அதன் கலைப்பின் போது மட்டும் அழைப்பு விடுக்கலாம் என ஒதுக்கி வைத்துள்ள அழைக்கப்பட்ட முதலின் ஒரு பகுதியினை காப்பு முதல் என்று அழைக்கலாம்.

15. முன்னுரிமை பங்குகளுக்கும் நேர்மை பங்குகளுக்கும் உள்ள வேறுபாடுகளை கூறவும். [Mar 24]

அடிப்படை	முன்னுரிமை பங்குகள்	நேர்மை பங்குகள்
பொருள்	முன்னுரிமை பெற்றிருக்கும் பங்குகள், முன்னுரிமை பங்குகள்	முன்னுரிமை பங்குகள் அல்லாத பங்குகள் நேர்மை பங்குகள்
வாக்குரிமை	வாக்குரிமை கிடையாது	வாக்குரிமை உண்டு
பங்காதாய விகிதம்	நிலையாக இருக்கும்	மாறிக்கொண்டே இருக்கும்.

16. **இயக்க இலாபம் எவ்வாறு கண்டறியப்படுகிறது**? [July 22]
    - இயக்க இலாபம் = விற்பனை மூலம் பெற்ற வருவாய் – இயக்க அடக்க விலை
    - இயக்க அடக்க விலை = விற்ற பொருளின் அடக்க விலை + இயக்க செலவுகள்

17. **விகித பகுப்பாய்வின் ஏதேனும் மூன்று நன்மைகளை தரவும். [Jun 23]**
    - செயல்பாடுகளின் செயல் திறனை அளவிடுகிறது.
    - நிதி நிலையின் கடன் தீர்க்கும் திறனை அளவிடுகிறது.
    - இலாபத்தன்மையை ஆய்வு செய்கிறது.

18. **சரக்கிருப்பு மற்றும் முன்கூட்டி செலுத்திய செலவுகள் நீர்மை சொத்தாக கருதப்படுவதில்லை காரணம் கூறவும்.** **[Mar 23]**
    - இவற்றை எளிதில் ரொக்கமாக மாற்ற இயலாது.

19. **ஒப்பீட்டு அறிக்கை தயாரிப்பில் உள்ள படிநிலைகளை விளக்கவும். [Mar 26]**

பத்தி 1 – இந்த பத்தியில் வருமான அறிக்கை மற்றும் இருப்பு நிலை குறிப்பில் உள்ள விவரங்கள் பதியப்படும்

பத்தி 2 – முதல் ஆண்டிற்கான தொகையை பதிவு செய்யவும்

பத்தி 3 – இரண்டாம் ஆண்டிற்கான தொகையை பதிவு செய்யவும்

பத்தி 4 – மதிப்பு அதிகரித்திருந்தால் கூட்டல் அடையாளமும் மதிப்பு குறைந்து இருந்தால் கழித்தல் அடையாளமும் இட வேண்டும்

பத்தி 5 – கூடும் அல்லது குறையும் சதவீதம்.

20. **எதிர்ப்பதிவு சான்றாவணம் என்றால் என்ன? அதனை பதிவு செய்வதற்கான நடைமுறைகளை எழுதவும்.** [Mar 26]

ரொக்க கணக்கு மற்றும் வங்கி கணக்கு ஆகிய இரண்டும் உள்ளடக்கிய நடவடிக்கைகள் எதிர்ப்பதிவு சான்றாவணம் கொண்டு பதியப்படும்.

Gateway of Tally > Transactions > Accounting vouchers > F4: Contra.

21. கணினிமயக் கணக்கியல் முறையின் பயன்பாடுகளில் ஏதேனும் மூன்றினை எழுதுக. [June 25]

கணக்கேடுகளை பராமரித்தல்:

கணினி மைய கணக்கியல் முறையில் கணக்கேடுகளை எளிதாகவும் திறன் பட நீண்ட காலங்களுக்கு பராமரிக்கலாம்.

சரக்கிருப்பு மேலாண்மை:

கணினி மைய கணக்கியல் முறை திறம்பட சரக்கிருப்பு மேலாண்மைக்கு வழிவகை செய்கிறது.

அறிக்கை உருவாக்குதல்:

கணினி மைய கணக்கியல் முறை பல்வேறு வழக்கமான மற்றும் குறிப்பிட்ட நோக்க அறிக்கைகள் உருவாக்க உதவி புரிகிறது.

22. **Tally– ல் கீழ்க்காண்பனவற்றை பார்வையிடுவதற்கான நுழைவு வாயிலை எழுதுக.**
(July 2022, March 2024, March 2025 & June 2026)

இலாப நட்ட கணக்கு

Gateway of Tally > Reports > Profit and Loss account > AltF1(Detailed)

இருப்பு நிலை குறிப்பு

Gateway of Tally > Reports > Balance Sheet > AltF1(Detailed)

நாளேடு

Gateway of Tally > Reports > Day Book > AltF1(Detailed)

23. கணக்கியல் சான்றாவணம் குறித்து சிறு குறிப்பு வரைக [May 22]

- நடவடிக்கைகளின் விவரங்களை கொண்டுள்ள ஒரு ஆவணமே சான்றாவணம் ஆகும்.
- நடவடிக்கைகள் சான்றாவணம் பதிவுகள் மூலமே பதியப்பட வேண்டும்
- முன்பே வரையறுக்கப்பட்ட கொள்முதல், விற்பனை, செலுத்தல், பெறுதல் மற்றும் எதிர்ப்பதிவு போன்ற சான்றாவணம் Tally கொண்டுள்ளது.

24. Tally ERP–9– ல் பொதுவாக பயன்படுத்தப்படும் சான்றாவணங்களின் வகைகளை குறிப்பிடவும்.
(June 2024)

- பெறுதல் சான்றாவணம்
- செலுத்தல் சான்றாவணம்
- எதிர்ப்பதிவு சான்றாவணம்
- கொள்முதல் சான்றாவணம்
- விற்பனை சான்றாவணம்
- உரிய குறிப்பேடு சான்றாவணம்

ஐந்து மதிப்பெண் வினாக்கள்

1. கணினி மைய கணக்கியல் முறையில் பயன்பாடுகளில் ஏதேனும் ஐந்தினை விளக்கவும்
(July 2022, March2023, March 2024, June 2026)

கணக்கேடுகளைப் பராமரித்தல்:

கணினி மைய கணக்கியல் முறையில் கணக்கேடுகளை எளிதாகவும் திறன்பட நீண்ட காலங்களுக்கு பராமரிக்கலாம்.

சரக்கிருப்பு மேலாண்மை:

கணினி மைய கணக்கியல் முறை திறம்பட சரக்கிருப்பு மேலாண்மைக்கு வழிவகை செய்கிறது.

அறிக்கை உருவாக்குதல்:

கணினி மைய கணக்கியல் முறை பல்வேறு வழக்கமான மற்றும் குறிப்பிட்ட நோக்கங்களுக்கான அறிக்கைகள் உருவாக்க உதவி புரிகிறது.

வரிவிதிப்பு :

கணினி மைய கணக்கியல் முறை பல்வேறு வரிகளை கணக்கீடு செய்யவும் அதை திருத்தம் செய்து அரசாங்க கணக்கில் செலுத்துவதற்கு உதவி புரிகிறது.

சம்பள பட்டியல் தயாரித்தல்:

கணினி மைய கணக்கில் முறை பணியாளரின் வருகையை பதிந்து சம்பள தொகையை கணக்கிடுகிறது.

2. நிலை முதல் முறைக்கும், மாறுபடும் முதல் முறைக்கும் இடையேயான வேறுபாடுகளை தரவும்.
(March 2023)

அடிப்படை	நிலை முதல் முறை	மாறுபடும் முதல் முறை
கணக்குகளின் எண்ணிக்கை	இரண்டு கணக்குகள் முதல் கணக்கு, நடப்பு கணக்கு	ஒரு கணக்கு முதல் கணக்கு
முதல் தொகையில் மாற்றம்	முதல் தொகை மாறாமல் இருக்கும்.	முதல் தொகை பருவந்தோறும் மாறும்
இறுதி இருப்பு	முதல் கணக்கு வரவிருப்பு நடப்பு கணக்கு பற்று அல்லது வரவு இருப்பு காட்டும்.	முதல் கணக்கு வரவு இருப்பையே காட்டும் இது பற்று இருப்பையும் கூட காட்டலாம்.
சரிகட்டுதல்கள்	சரிகட்டுதல்கள் நடப்பு கணக்கில் செய்யப்படும்	சரிகட்டுதல்கள் முதல் கணக்கில் செய்யப்படும்.

3. தியாக விகிதத்திற்கும் ஆதாய விகிதத்திற்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை? [மார்ச், ஜூன் 2023]

அடிப்படை	தியாக விகிதம்	ஆதாய விகிதம்
1. பொருள்	புதிய கூட்டாளிக்கு, பழைய கூட்டாளிகள் தியாகம் செய்து கொடுக்கும் இலாப பங்கு.	தொடரும் கூட்டாளிகள் விலகும் கூட்டாளிகளிடமிருந்து பெறும் ஆதாய பங்கு.
2. கணக்கிடும் காலம்	புதிய கூட்டாளி சேர்ப்பின் போது கணக்கிடப்படுகிறது.	கூட்டாளி ஒருவர் விலகும் போது கணக்கிடப்படுகிறது.
3. கணக்கிடும் முறை	தியாக விகிதம் = பழைய இலாப விகிதம் – புதிய இலாப விகிதம்	ஆதாய விகிதம் = புதிய இலாப விகிதம் – பழைய இலாப விகிதம்
நோக்கம்	தியாகம் செய்யும் கூட்டாளிகளுக்கு நற்பெயர் தொகையை கணக்கிட பயன்படுகிறது	ஆதாயம் பெறும் கூட்டாளிகளுக்கு நற்பெயர் தொகையை கணக்கிட பயன்படுகிறது.

4. Tally ERP 9 – ல் பொதுவாக பயன்படுத்தப்படும் கணக்கியல் சான்றாவணங்களில் எவையேனும் ஐந்தினை குறிப்பிட்டு விளக்குக. **(March 2025)**

பெறுதல் சான்றாவணம்:

அனைத்து ரொக்கம் அல்லது வங்கியின் மூலமாக பெறுதல் நடவடிக்கைகள் பெறுதல் சான்றாவனத்தை பயன்படுத்தி பதியப்படுகிறது.

செலுத்தல் சான்றாவணம்:

அனைத்து ரொக்கம் அல்லது வங்கியின் மூலமாக செலுத்த நடவடிக்கைகள் செலுத்தல் சான்றாவனத்தை பயன்படுத்தி பதியப்படுகிறது

எதிர்ப்பதிவு சான்றாவணம்:

ரொக்க கணக்கு மற்றும் வங்கி கணக்கு ஆகிய இரண்டும் உள்ளடக்கிய நடவடிக்கைகள் எதிர்ப்பதிவு சான்றாவனம் கொண்டு பதியப்படுகிறது.

கொள்முதல் சான்றாவணம்:

கொள்முதல் சான்றாவனம் ரொக்க மற்றும் கடன் சரக்கு கொள்முதல் பதிவதற்கு பயன்படுகிறது.

விற்பனை சான்றாவணம்:

விற்பனை சான்றாவனம் ரொக்கம் மற்றும் கடன் சரக்கு விற்பனை பதிவதற்கு பயன்படுத்தப்படுகிறது.

5. நற்பெயரை தீர்மானிக்கும் ஏதேனும் ஐந்து காரணிகளை கூறி அவற்றை விளக்கவும். [மார்ச் 24 & ஜூன் 24]

நிறுவனத்தின் இலாபம் ஈட்டும் திறன்:

நிறுவனத்தின் இலாபமிட்டும் திறன் நற்பெயரின் மதிப்பினை தீர்மானிக்கிறது அதிக இலாபமிட்டும் நிறுவனம் அதிகமான நட்பெயர் மதிப்பினை கொண்டிருக்கும்.

நல்ல தரமான பொருள்கள் மற்றும் சேவைகள் வழங்குதல்:

நல்ல தரமான பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதால் வாடிக்கையாளர்கள் மத்தியில் நன்மதிப்பை பெற்றிருக்கும்.

வியாபார நிறுவனத்தின் கால அளவு:

நீண்ட ஆண்டுகள வணிகத்தை நடத்தி வரும் நிறுவனத்தை வாடிக்கையாளர் நன்கு அறிந்திருந்தால் இந்த நிறுவனம் அதிக நன்மதிப்பை கொண்டிருக்கும்.

திறமைமிகு மேலாண்மை:

திறமையான மேலாண்மை திறன் கொண்டிருக்கும் நிறுவனம் அதிக மதிப்பிலான நற்பெயரைக் கொண்டிருக்கும்.

போட்டியின் அளவு:

போட்டியே இல்லாத அல்லது குறைவான போட்டியை கொண்டுள்ள நிறுவனத்தின் நற்பெயர் மதிப்பு அதிகமானதாக இருக்கும்.

6. கூட்டான்மை ஒப்பாவணம் இல்லாத போது இந்திய கூட்டமைச் சட்டம் 1932 – ன் படி கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்து குறிப்பு தரவும்.

கூட்டாளிகளின் ஊதியம்

எந்த கூட்டாளிக்கும் ஊதியம் அல்லது உழைப்பூதியம் அனுமதிக்கப்பட வேண்டியதில்லை.

இலாப பகிர்வு விகிதம்

இலாபங்கள் அல்லது நட்டங்களை கூட்டாளிகள் சமமாக பகிர்ந்து கொள்ள வேண்டும்.

முதல் மீது வட்டி

கூட்டாளிகளின் முதல் மீது வட்டி அனுமதிக்கப்படுவதில்லை.

எடுப்பு மீது வட்டி

கூட்டாளிகளின் எடுப்புக்கள் மீது வட்டி விதிக்க கூடாது.

கடன் மீது வட்டி

கடன் மீதான வட்டி ஆண்டுக்கு 6 % சதவீதம் வழங்கப்பட வேண்டும்.

7. Tally – ல் கீழ்காண்பனவற்றை பார்வையிடுவதற்கான நுழைவு வாயிலை எழுதுக. [ஜூன் 2025]

- **இருப்பாய்வு :** Gateway of Tally > Reports > Trial balance > AltF1(Detailed)
- **இலாப நட்ட கணக்கு :** Gateway of Tally > Reports > Profit and Loss account > AltF1(Detailed)
- **இருப்பு நிலை குறிப்பு :** Gateway of Tally > Reports > Balance sheet > AltF1(Detailed)

- **விகித பகுப்பாய்வு:** Gateway of Tally > Reports > Ratio analysis > AltF1(Detailed)
- **நாளேடு:** Gateway of Tally > Reports > Day book > AltF1(Detailed)

8. கணக்கியல் அறிக்கைகள் என்றால் என்ன கணக்கியல் அறிக்கைகளை வடிவமைத்தலின் படிநிலைகள் யாவை? [மார்ச் 2026]

கணக்கியல் அறிக்கையானது ஒரு நிறுவனத்தின் கணக்கெடுகளில் இருந்து பெறப்பட்ட கணக்கியல் தகவல் தொகுப்பு ஆகும்.

கணக்கியல் அறிக்கைகளை வடிவமைத்தலின் படிநிலைகள் பின்வருமாறு:

- அறிக்கை உருவாக்குவதில் நோக்கத்தை வரையறுக்கவும்
- அறிக்கையின் கட்டமைப்பை குறிப்பிடவும்
- தரவு தளத்துடன் தொடர்பு கொண்டு ஏடுகளில் இருந்து தரவுகளை எடுக்க மாற்றம் செய்ய சேர்க்க அல்லது அழிக்க தரவு தர கேள்விகளை உருவாக்கவும்.

இரண்டு மதிப்பெண் கணக்குகள்!

1. பின்வரும் தகவல்களிலிருந்து இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும். [MARCH 2023 & JUNE 25]

விவரம்	தொகை ₹
2021 ஜனவரி 1 அன்று முதல்	2,60,000
2021 டிசம்பர் 31 அன்று முதல்	3,60,000
அவ்வாண்டு கொண்டு வந்த கூடுதல் முதல்	20,000
அவ்வாண்டில் எடுப்புகள்	50,000

தீர்வு:

2021 டிசம்பர் 31 –ம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான இலாப நட்ட அறிக்கை

விவரம்	தொகை (₹)
இறுதி முதல் (31–12–2021)	3,60,000
கூட்டுக: எடுப்புகள்	50,000
	4,10,000
கழிக்க: கூடுதல் முதல்	20,000
சரிக்கட்டப்பட்ட இறுதிமுதல்	3,90,000
கழிக்க: தொடக்க முதல்	2,60,000
அவ்வாண்டின் இலாபம்	1,30,000

2. கீழ்காணும் விவரங்களிலிருந்து இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும் (Jun 2025 & Jun 2026)

விவரம்	₹
ஆண்டின் தொடக்கம் முதல்	2,50,000
ஆண்டின் இறுதி முதல்	4,25,000
அவ்வண்டில் கொண்டு வந்த கூடுதல் முதல்	60,000
அவ்வாண்டில் எடுப்புகள்	35,000

விடை: **இலாப நட்ட அறிக்கை**

விவரம்	தொகை (₹)
இறுதி முதல்	4,25,000
கூட்டுக: எடுப்புகள்	35,000
	4,60,000
கழிக்க: கூடுதல் முதல்	60,000

சரிக்கட்டப்பட்ட இறுதிமுதல்	4,00,000
கழிக்க: தொடக்க முதல்	2,50,000
அவ்வாண்டின் இலாபம்	1,50,000

3. ஒரு மன்றத்திற்கு தொடர்புடைய பின்வரும் விவரங்களில் இருந்து 2018 ஆம் ஆண்டில் சந்தா மூலம் பெறும் வருவாயை கணக்கிடவும் (மார்ச் 2026)

விவரம்	1.1.2018	31.12.2018
சந்தா பெற வேண்டியது	3000	5000
முன்கூட்டி பெற்ற சந்தா	4000	7000

2018 ஆம் ஆண்டில் சந்தா பெற்றது ₹ 45,000

விடை:

2018 ஆம் ஆண்டிற்குரிய சந்தா மூலம் பெற்ற வருமானம் கணக்கிடுதல்

விவரம்	₹	₹
2018 – ஆம் ஆண்டில் பெற்ற சந்தா		45,000
கூட்டுக: 2018 –ஆம் ஆண்டிற்கான சந்தா 2017–ல் பெற்றது	4,000	
2018 –ஆம் ஆண்டிற்கான சந்தா பெற வேண்டியது	5,000	9,000
		54,000
கழிக்க: 2017–இல் பெற வேண்டிய சந்தா	3000	
2018–இல் முன்கூட்டி பெற்ற சந்தா	7000	10000
2018 ஆம் ஆண்டில் சந்தா மூலம் பெற்ற வருமானம்		44,000

---

4. பிரவீனா மற்றும் தான்யா என்ற இரு கூட்டாளிகள் 7:3 என்ற இலாப விகிதத்தில் இலாபத்தைப் பகிர்ந்து வந்தனர். அவர்கள் மாலினி என்பவரைக் கூட்டாண்மையில் சேர்த்துக் கொண்டனர். பிரவீனா, தான்யா மற்றும் மாலினி அவர்களின் புதிய இலாப விகிதம் 5:2:3. தியாக விகிதம் கணக்கிடவும். [MAR–2024]

தீர்வு:

பிரவீணா மற்றும் தான்யா அவர்களின் பழைய பங்கு = 7 : 3 (அதாவது 7/10 : 3/10)

பிரவீணா, தான்யா மற்றும் மாலினியின் புதிய இலாபப் பங்கு = 5 : 2 : 3 (

(அதாவது 5/10 : 2/10 : 3/10)

தியாகப் பங்கு = பழைய பங்கு – புதிய பங்கு

பிரவீணா (தி.ப) = 7/10 – 5/10 = 7–5 /10 =2/10

தான்யா (தி.ப) = 3/10 – 2/10 = 3–2/10 = 1/10

ஆகையால், பிரவீணா மற்றும் தான்யா ஆகியோரின் தியாகப் பங்கு = 2/10 : 1/10

தியாக விகிதம் = 2 : 1

---

5. கவிதா என்பவர் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளி. அவர் வழக்கமாக ஒவ்வொரு மாதமும் ₹ 2,500 எடுத்துக் கொள்கிறார். எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 4% கணக்கிடப்பட வேண்டும். அவர் ஒவ்வொரு மாத தொடக்கத்தில் எடுத்திருந்தால் எடுப்புகள் மீது வட்டி சராசரி கால முறையைப் பயன்படுத்திக் கணக்கிடவும். [MAY–2022]

விடை:

சராசரி கால முறையில் எடுப்புகள் மீது வட்டி

மொத்த எடுப்புத்தொகை = ஒவ்வொரு மாத எடுப்புத்தொகை x 12

= 2500 x 12 = 30,000

எடுப்புகள் மீதான வட்டி = மொத்த எடுப்புத்தொகை x வட்டி விகிதம் x $\frac{\text{சராசரி காலம்}}{12}$

எடுப்புகள் மீதான வட்டி = 30,000 x $\frac{4}{100}$ x $\frac{6.5}{12}$ = ₹ 650

6. அப்துல் வரையறு நிறுமம் ₹ 10 மதிப்புள்ள 50,000 நேர்மைப் பங்குகளை ₹ 3 முனைமத்தில் வெளியிட்டது. அனைத்து தொகையும் விண்ணப்பத்துடன் செலுத்தப்பட்டது. குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும். [MAR–2022]

விடை: அப்துல் வரையறு நிறுமத்தின் குறிப்பேடு பதிவுகள்

நாள்	விவரம்	பே.ப. எண்	பற்று (₹)	வரவு (₹)
	வங்கி க/கு (13 x 50,000) ப		6,50,000	
	பங்கு விண்ணப்ப க/கு			6,50,000
	(பங்கு அனைத்தும் விண்ணப்பத்துடன் செலுத்தியது)			
	பங்கு விண்ணப்ப க/கு ப		6,50,000	
	பங்கு முதல் க/கு (50,000 x 10)			5,00,000
	பங்கு முனைமம் க/கு (50,000 x 3)			1,50,000
	(விண்ணப்பப் பணம் பங்கு முதலுக்கு மாற்றியது)			

7. கீழ்க்கண்ட தகவல்களிலிருந்து விரைவு விகிதத்தைக் கணக்கிடவும். மொத்த நடப்புப் பொறுப்புகள் ₹ 2,40,000; மொத்த நடப்புச் சொத்துகள் ₹ 4,50,000; சரக்கிருப்பு ₹ 70,000; முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் ₹ 20,000. [MAR–2022]

விடை:

விரைவு விகிதம் = நீர்மைச் சொத்துக்கள் / நடப்புப் பொறுப்புகள்

நீர்மைச் சொத்துக்கள் = நடப்புச் சொத்துக்கள் – சரக்கிருப்பு – முன்கூட்டிச் செலுத்திய செலவுகள்

நீர்மைச் சொத்துக்கள் = 4,50,000 – 70,000 – 20,000 = ₹ 3,60,000

விரைவு விகிதம் = 3,60,000 / 2,40,000 = 1.5 : 1

8. அருள் நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து ஒப்பீட்டு வருமான அறிக்கையை தயாரிக்கவும். (மார்ச் 2026)

விவரம்	2015–16 (₹)	2016–17 (₹)
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	50,000	60,000
இதர வருமானம்	10,000	30,000
செலவுகள்	40,000	50,000

விடை: அருள் நிறுமத்தின் ஒப்பீட்டு வருமான அறிக்கை

விவரம்	2015–16 ₹	2016 –17 ₹	தொகை (+ / –)	சதவீதம் (+ / –)
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	50,000	60,000	+10,000	+20
கூட்டுக: இதர வருமானங்கள்	10,000	30,000	+20,000	+200
மொத்த வருமானங்கள்	60,000	90,000	+30,000	+50
கழிக்க: செலவுகள்	40,000	50,000	+10,000	+25
வரிக்கு முன்னர் உள்ள இலாபம்	20,000	40,000	+20,000	+100

9. பின்வரும் விவரங்களிலிருந்து தருண் & கோ நிறுமத்தின் ஒப்பீட்டு வருமான அறிக்கையை தயாரிக்கவும். [MAR–2022]

விவரம்	2016–17 (₹)	2017–18 (₹)
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	1,00,000	1,25,000
இதர வருமானங்கள்	25,000	20,000
செலவுகள்	75,000	60,000

விடை: தருண் வரையறு நிறுமத்தின் ஒப்பீட்டு வருமான அறிக்கை

விவரம்	2016–17 (₹)	2017 –18 (₹)	தொகை (+ / –) (₹)	சதவீதம் (+ / –) (₹)
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	1,00,000	1,25,000	+ 25,000	+25
கூட்டுக: இதர வருமானங்கள்	25,000	20,000	– 5000	– 20
மொத்த வருமானங்கள்	1,25,000	1,45,000	+ 20,000	+ 16
கழிக்க: செலவுகள்	75,000	60,000	–15,000	–20
வரிக்கு முன்னர் உள்ள இலாபம்	50,000	85,000	+35,000	+70

(குறிப்பு: சதவீதக் கணக்கீடு= தொகையின் கூடுதல் / குறைவு முதல் வருடத் தொகை x 100
= 25,000 /1,00,000 x 100=25)

---

10. **ராம் மற்றும் ஷியாம் இருவரும் கூட்டாளிகள். ராம் ஒவ்வொரு அரையாண்டின் தொடக்கத்திலும் ₹ 12,000 எடுத்துக் கொண்டார். எடுப்புகள் மீதான வட்டி ஆண்டுக்கு 10%. 2021 டிசம்பர் 31 –ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய எடுப்புகள் மீதான வட்டியினை சராசரி கால முறையைப் பயன்படுத்திக் கணக்கிடவும். [MAY–2023]**

விடை:

மொத்த எடுப்புத் தொகை = 12,000 x 2 = ₹ 24,000 (ஏனெனில் அரையாண்டுக்கு ஒருமுறை)

அரையாண்டு தொடக்கத்திற்கான சராசரி காலம் = 9

எடுப்புகள் மீது வட்டி = மொத்த எடுப்புத்தொகை x வட்டி வீதம் x $\frac{\text{சராசரி காலம்}}{12}$

எடுப்புகள் மீது வட்டி = 24,000 x $\frac{10}{100}$ x $\frac{9}{12}$ = ₹ 1,800

11. **பின்வரும் தகவல்களிலிருந்து மொத்த இலாபம் கணக்கிடுக. (மார்ச் 2024, ஜூன் 2023)**
விற்பனை மூலம் பெற்ற வருவாய் – ₹1,00,000 ; விற்பனை மூலம் பெற்ற வருவாய்க்கான அடக்கவிலை – ₹80,000 ; கொள்முதல் – ₹62,500

விடை:

மொத்த இலாபம் = விற்பனை மூலம் பெற்ற வருவாய் – {விற்பனை மூலம் பெற்ற வருவாயின் அடக்கவில்லை

= 1,00,000 – 80,000

= ₹ 20,000

மொத்த இலாப விகிதம் = $\frac{\text{மொத்த இலாபம்}}{\text{விற்பனை மூலம் பெற்ற வருவாய்}}$ x 100 = $\frac{2000}{100000}$ x 100

= 20 %

---

12. **பின்வரும் தகவல்களிலிருந்து மொத்த இலாபம் கணக்கிடவும். விற்பனை மூலம் பெற்ற வருவாய் ₹ 2,00,000, விற்பனை மூலம் பெற்ற வருவாய்க்கான அடக்கவிலை ₹ 1,60,000 மற்றும் கொள்முதல் ₹ 1,25,000. [MAR–2025]**

விடை:

மொத்த இலாபம் = விற்பனை மூலம் பெற்ற வருவாய் – {விற்பனை மூலம் பெற்ற வருவாயின் அடக்கவில்லை

மொத்த இலாபம் = 2,00,000 –1,60,000 = ₹ 40,000

மொத்த இலாப விகிதம் = $\frac{\text{மொத்த இலாபம்}}{\text{விற்பனை மூலம் பெற்ற வருவாய்}}$ x 100 = $\frac{40000}{200000}$ x 100

மொத்த இலாப விகிதம் = **20%**

---

14. **ஆனந்த் மற்றும் சுமன் என்ற கூட்டாளிகள் இலாப நட்டங்களை 3:2 என்ற விகிதத்தில் பகிர்ந்து வருகின்றனர். அவர்கள் சரண் என்பவரை 1/5 பங்கிற்கு கூட்டாளியாகச் சேர்த்தனர். அவர் அப்பங்கு முழுவதையும் ஆனந்த்திடமிருந்து பெற்றுக் கொண்டார். புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் தியாக விகிதத்தைக் கணக்கிடவும். [MAR–2025]**

விடை:

பழைய கூட்டாளிகளின் பழைய பங்கு (ஆனந்த், சுமன்) = 3 : 2 அதாவது 3/5 : 2/5

சரண் தனது பங்கு முழுவதையும் ஆனந்த்திடமிருந்து மட்டுமே பெற்றதால்:

தியாக விகிதம் = 1 : 0 (ஆனந்த் மட்டுமே தியாகம் செய்கிறார்)

புதிய பங்கு = பழைய பங்கு – தியாகப்பங்கு

ஆனந்த் புதிய பங்கு = 3/5 – 1/5 = 2/5

சுமன் புதிய பங்கு = 2/5 (மாற்றமில்லை)

சரண் பங்கு = 1/5

ஆனந்த், சுமன் மற்றும் சரண் ஆகியோரின் புதிய விகிதம் = 2 : 2 : 1

---

15. **ராஜா நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து 2023 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய பொது அளவு வருமான அறிக்கையைத் தயார் செய்யவும்.**

விவரம்	2022–23 (₹)
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	4,50,000
இதர வருமானம்	67,500
செலவுகள்	1,35,000

விடை:

விவரம்	தொகை(₹)	விற்பனை மூலம் பெற்ற வருவாய் சதவீதம் (%)
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	4,50,000	100%
(+) இதர வருமானம்	67,500	15%
மொத்த வருவாய்	**5,17,500**	**115%**
(–) செலவுகள்	1,35,000	30%
வரி முன்னர் இலாபம்	**3,82,500**	**85%**

(குறிப்பு: பிற வருமானத்திற்கான சதவீதம் கணக்கிடுதல் = $\frac{67,500}{4,50,000}$ x 100 = 15%)

---

16. **பின்வரும் தகவல்களிலிருந்து புற அக பொறுப்புகள் விகிதம் கணக்கிடவும். கடனீட்டுப் பத்திரங்கள் ₹ 80,000; நேர்மைப் பங்கு முதல் ₹ 1,00,000; காப்புகள் மற்றும் மிகுதி ₹ 60,000.**

விடை:

புற அக பொறுப்புகள் விகிதம் = நீண்டகாலக் கடன் x பங்குதாரர் நிதி

நீண்டகாலக் கடன் = கடனீட்டுப் பத்திரங்கள் = ₹ 80,000

பங்குதாரர் நிதி = நேர்மைப் பங்குமுதல் + காப்புகள் மற்றும் மிகுதி

= 1,00,000 + 60,000 = ₹ 1,60,000

புற அக பொறுப்புகள் விகிதம் =80,000 : 1,60,000 = 0.5 : 1

---

17. **அருள் வணிக நிறுவனத்தின் நற்பெயர் ₹ 1,20,000, சராசரி இலாபம் ₹ 40,000. கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கையைக் கணக்கிடவும். [MAR–2023]**

கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை = நற்பெயர் x சராசரி இலாபம்

கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை = 1,20,000 x 40,000 = 3 ஆண்டுகள்

---

18. A, B மற்றும் C என்ற கூட்டாளிகள் 5:3:2 என்ற விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்து வந்தனர். 31.3.2019 அன்று A கூட்டாண்மையை விட்டு விலகினார். அவருடைய விலகலின் போது நிறுவனத்தின் கணக்கேடுகளில் ₹ 1,00,000 காப்பு நிதியினைக் காட்டியது. காப்பு நிதியினை மாற்றுவதற்கு தேவையான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும். [MAR 2026]

தீர்வு: குறிப்பேட்டுப் பதிவு

நாள்	விவரம்	பே.ப. எண்	பற்று (₹)	வரவு (₹)
	காப்பு நிதி க/கு. ப		1,00,000	
	A முதல் க/கு			50,000
	B முதல் க/கு			30,000
	C. முதல் க/கு			20,000
	(பகிர்ந்து தரா காப்பு நிதி கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கு மாற்றப்பட்டது)			

(காப்பு நிதி அனைத்து கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கு பழைய இலாப விகிதத்தில் மாற்றப்பட்டது)

---

20. தீனா, சூர்யா மற்றும் ஜானகி என்ற கூட்டாளிகள் 5 : 3 : 2 என்ற விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்து வந்தனர். 31.3.2018 அன்று தீனா கூட்டாண்மையிலிருந்து விலகினார். அவருடைய விலகலின்போது நிறுவனத்தின் கணக்கேடுகள் ₹50,000 காப்பு நிதியைக் (மார்ச் 24, ஜூன் 24) **காட்டியது. காப்பு நிதியை மாற்றுவதற்குத் தேவையான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.**

விடை: குறிப்பேட்டுப் பதிவு

நாள்	விவரம்	பே.ப. எண்	பற்று (₹)	வரவு (₹)
	காப்பு நிதி க/கு. ப		50,000	
	தீனா முதல் க/கு			25,000
	சூர்யா முதல் க/கு			15,000
	ஜானகி முதல் க/கு			10,000
	(பகிர்ந்து தரா காப்பு நிதி கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கு மாற்றப்பட்டது)			

21. **பின்வரும் விவரங்கள் சீர்காழி பாடகர்கள் சங்கத்தின் வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.**

01.04.2018 அன்று எழுதுபொருள் இருப்பு : ₹ 2,600
அவ்வாண்டில் வாங்கிய எழுதுபொருள்கள் : ₹ 6,500
31.03.2019 அன்று எழுதுபொருள்கள் இருப்பு : ₹ 2,200

தீர்வு:

சீர்காழி பாடகர்கள் சங்கத்தின் வருவாய் மற்றும் செலவினக் கணக்கு
31–03–2019 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரியது

ப			வ		
செலவுகள்	தொகை (₹)	தொகை (₹)	வருமானம்	தொகை (₹)	தொகை (₹)
எழுதுபொருள்கள் பயன்படுத்தியது:					
தொடக்க இருப்பு	2,600				
கூட்டுக: கொள்முதல்	6,500				
	9,100				
கழிக்க: இறுதி இருப்பு	(2,200)	**6,900**			

22. **சாந்தி என்பவரின் 2018, டிசம்பர் 31–ம் நாளைய இருப்புகள் பின்வருமாறு:**

விவரம்	தொகை (₹)	விவரம்	தொகை (₹)
பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு	6,000	பற்பல கடனீந்தோர்	25,000
செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு	4,000	சரக்கிருப்பு	45,000
இயந்திரம்	60,000	கடனாளிகள்	70,000
அறைகலன்	10,000	ரொக்கம்	4,000

2018 டிசம்பர் 31–ஆம் நாளைய நிலை அறிக்கை தயாரித்து அந்நாளைய முதலைக் கணக்கிடவும்.

தீர்வு:

சாந்தி என்பவரின் ஏடுகளில் 2018 டிசம்பர் 31 ஆம் நாளைய நிலை அறிக்கை

பொறுப்புகள்	தொகை (₹)	சொத்துகள்	தொகை (₹)
பற்பல கடனீந்தோர்	25,000	ரொக்கம்	4,000
செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு	4,000	சரக்கிருப்பு	45,000
		கடனாளிகள்	70,000
முதல் (இருப்புகட்டும் தொகை)	1,66,000	பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு	6,000
		இயந்திரம்	60,000
		அறைகலன்	10,000
மொத்தம்	1,95,000	மொத்தம்	1,95,000

---

24. **சராசரி இலாபம் ₹ 30,000 ஆக இருக்கும்போது 3 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.(ஜூன் 2026)**

நற்பெயர் = சராசரி இலாபம் X கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

=30,000 X 3

= ₹ 90,000

---

25. **கலா, மாலா மற்றும் நீலா என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபங்களை 2 : 2 : 1 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். கலா என்பவர் கூட்டாண்மையை விட்டு விலகுகிறார். மாலா மற்றும் நீலாவுக்கும் இடையேயுள்ள புதிய இலாபப் பகிர்வு விகிதம் 3 : 2. ஆதாய விகிதத்தைக் கணக்கிடவும்.(ஜூன் 2026)**

விடை:

பழைய இலாப விகிதம்:

கலா : மாலா : நீலா = 2:2:1

புதிய லாப விகிதம்:

மாலா : நீலா = 3:2

ஆதாய பங்கு = புதிய பங்கு = பழைய பங்கு

மாலா = 3/5 – 2/5 = 1/5

நீலா. = 2/5 – 1/5 = 1/5

ஆதாய விகிதம் = 1:1

---

26. **ஆஷா நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து நிலைச் சொத்துகள் சுழற்சி விகிதத்தைக் கணக்கிடவும்.(ஜூன் 2026)**

(i) **அவ்வாண்டில் விற்பனை மூலம் பெற்ற வருவாய் ₹ 6,00,000.**

(ii) **அவ்வாண்டில் இறுதியில் நிலைச்சொத்துகள் ₹ 60,000.**

விடை:

நிலைச் சொத்துகள் சுழற்சி விகிதம்

$$= \frac{\text{விற்பனை மூலம் பெற்ற வருவாய்}}{\text{நிலைச் சொத்துக்கள்}} = \frac{600000}{60000} = 10 \text{ மடங்குகள்.}$$

27. அனிதா என்பவர் தஞ்சாவூர் மோட்டார் வரையறு நிருமத்தின் ₹ 10 மதிப்புள்ள 500 நேர்மைப் பங்குகளை வைத்துள்ளார். அவர் விண்ணப்பத்தின் மீது ₹ 3, ஒதுக்கீட்டின் மீது ₹ 5 செலுத்தி உள்ளார். ஆனால் முதலாம் மற்றும் இறுதி அழைப்புத் தொகையான ₹ 2 செலுத்தவில்லை. அழைப்புத் தொகையை செலுத்தத் தவறியதால் இயக்குநர்கள் அப்பங்குகளை ஒறுப்பிழப்பு செய்தனர். ஒறுப்பிழப்பிற்கான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும். (ஜூன் 2025)

விடை: குறிப்பேட்டுப் பதிவு

நாள்	விவரம்	பே.ப. எண்	பற்று ₹	வரவு ₹
	நேர்மைப் பங்கு முதல் க/கு ப		5,000	
	நேர்மைப் பங்கு முதல் மற்றும் இறுதி அழைப்பு க/கு			1,000
	பங்கு ஒறுப்பிழப்பு க/கு			4,000

---

28. பின்வரும் தகவல்களிலிருந்து புற அக பொறுப்புகள் விகிதம் கணக்கிடவும்.(ஜூன் 2025)

கடனீட்டுப் பத்திரங்கள் – ₹ 80,000
நேர்மைப் பங்கு முதல் – ₹ 1,00,000
காப்புகள் மற்றும் மிகுதி – ₹ 60,000
விடை:

பங்குதாரர் நிதி = நேர்மை பங்கு முதல் + காப்புகள் மற்றும் மிகுதி
= 1,00,000 + 60,000

புற அக பொறுப்புக்கள் விகிதம் $= \frac{\text{நீண்ட கால பொறுப்புக்கள்}}{\text{பங்குதாரர் நிதி}} = \frac{80,000}{1,60,000} = 0.5 : 1$

29. பின்வரும் விவரங்களிலிருந்து, கடந்த 4 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 3 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பை கணக்கிடவும். (ஜூன் 2025, ஜூன் 2023)

ஆண்டு	முடிவு	தொகை ₹
2020	இலாபம்	10,000
2021	இலாபம்	16,000
2022	நட்டம்	6,000
2023	இலாபம்	12,000

விடை:

சராசரி இலாபம் $= \frac{\text{மொத்த இலாபம்}}{\text{ஆண்டுகளின் எண்ணிக்கை}} = \frac{10,000+16,000-6,000+12,000}{4}$

$= \frac{32000}{4} = ₹8,000$

நற்பெயர் = சராசரி இலாபம் X கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை
= 8,000 X 3 = ₹24,000

---

30. ரோஸி, ரதி மற்றும் இராணி என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபங்கள் மற்றும் நட்டங்களை சமமாகப் பகிர்ந்து வந்தனர். 1.1.2018 அன்று ரதி கூட்டாண்மையிலிருந்து விலகினார். அந்நாளைய இருப்பு நிலைக் குறிப்பின் சொத்துகள் பக்கத்தில் ₹ 45,000 பகிர்ந்து தரா நட்டம் எனக் காட்டியது. பகிர்ந்து தரா நட்டத்தைப் பகிர்ந்தளிப்பதற்கான குறிப்பேட்டுப் பதிவைத் தரவும். (ஜூன் 2023, ஜூன் 2024)

விடை: குறிப்பேட்டுப் பதிவு

நாள்	விவரம்	பே.ப. எண்	பற்று ₹	வரவு ₹
	ரோஸி முதல் க/கு ப		15,000	
	ரதி. முதல் க/கு ப		15,000	
	இராணி முதல் க/கு. ப		15,000	
	இலாப நட்ட க/கு			45,000
	(பகிர்ந்து தரா நட்டம் கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கு மாற்றப்பட்டது)			

மூன்று மதிப்பெண் வினாக்கள்

1. பின்வரும் விவரங்களிலிருந்து மொத்த விற்பனையைக் கணக்கிடவும்.

விவரம்	₹
2018, ஜனவரி 1 அன்று கடனாளிகள்	1,30,000
அவ்வாண்டில் கடனாளிகளிடமிருந்து பெற்ற	4,20,000
ரொக்கம்	35,000
விற்பனைத் திருப்பம்	2,00,000
2018, டிசம்பர் 31 அன்று கடனாளிகள்	4,60,000
ரொக்க விற்பனை	15,000
வாராக்கடன்	

தீர்வு: ப மொத்த கடனாளிகள் க/கு வ

விவரம்	₹		₹
இருப்பு கீ/கொ (தொ.இருப்பு)	1,30,000	ரொக்க க/கு	4,20,000
விற்பனை (கடன்)	**5,40,000**	விற்பனை திருப்பம்	35,000
		வாராக்கடன்	15,000
		இருப்பு கீ/இ (இ.இருப்பு)	2,00,000
	6,70,000		6,70,000

மொத்த விற்பனை= 4,60,000 + 5,40,000 =10,00,000

2. 2018, மார்ச் 31 அன்று தாமஸ் என்பவரின் ஏடுகளிலிருந்து பெறப்பட்ட இருப்புகள் பின்வருமாறு;

விவரம்	₹	விவரம்	₹
பற்பல கடனீந்தோர்	6,00,000	செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு	1,20,000
அறைகலன்	80,000	கைரொக்கம்	20,000
நிலம் மற்றும் கட்டடம்	3,00,000	பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு	60,000
பற்பல கடனாளிகள்	3,20,000	சரக்கிருப்பு	2,20,000

2019, மார்ச் 31 ஆம் நாளைய நிலை அறிக்கை தயாரிக்கவும் மற்றும் அந்நாளைய முதல் கண்டறியவும்.

தீர்வு: தாமஸ் என்பவரின் ஏடுகளில் 2018 மார்ச் 31–ம் நாளைய நிலை அறிக்கை

பொறுப்புகள்	₹	சொத்துகள்	₹
பற்பல கடனீந்தோர்	6,00,000	கைரொக்கம்	20,000
செலுத்தற்குரிய மாற்றுச்	1,20,000	சரக்கிருப்பு	2,20,000
சீட்டு		பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு	60,000
முதல் (இருப்புத் தொகை) ***	**2,80,000**	பற்பல கடனாளிகள்	3,20,000
		அறைகலன்	80,000
		நிலம் மற்றும் கட்டடம்	3,00,000
	10,00,000		10,00,000

3. பின்வரும் விவரங்களிலிருந்து மொத்தக் கொள்முதலைக் கணக்கிடவும்:

விவரம்	₹	விவரம்	₹
2018, ஜனவரி 1 அன்று பற்பல கடனீந்தோர்	30,000	கொள்முதல் திருப்பம்	15,000
		ரொக்கக் கொள்முதல்	2,25,000
2018, ஜனவரி 1 அன்று செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு கடனீந்தோருக்கு ரொக்கம் செலுத்தியது	25,000	31.12.2018 அன்று கடனீந்தோர்	25,000
	1,20,000	31.12.2018 அன்று செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு	20,000
	30,000		
செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டுச் செலுத்தியது			

தீர்வு: ப செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு க/கு வ

விவரம்	₹	விவரம்	₹
ரொக்கம் க/கு	30,000	இருப்பு கீ/கொ (தொ.இருப்பு)	25,000
இருப்பு கீ/இ (இறுதி இருப்பு)	20,000	**பற்பல கடனீந்தோர் க/கு *** (மாற்றுச்சீட்டு ஏற்கப்பட்டது)**	**25,000**
	50,000		50,000

ப மொத்த கடனீந்தோர் க/கு வ

விவரம்	₹	விவரம்	₹
ரொக்கம் க/கு	1,20,000	இருப்பு கீ/கொ (தொ.இருப்பு)	30,000
கொள்முதல் திருப்பம் க/கு	15,000	**கொள்முதல் க/கு (கடன்) *****	**1,55,000**
செலுத்தற்குரிய மாற்றுச்சீடு க/கு (மாற்றுச்சீட்டு ஏற்கப்பட்டது)	25,000		
இருப்பு கீ/இ (இறுதி இருப்பு)	25,000		
	1,85,000		1,85,000

மொத்த கொள்முதல் = 2,25,000 + 1,55,000 = 3,80,000

4. பின்வரும் விவரங்களிலிருந்து 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செல்வினக் கணக்குகளில் பற்று வைக்கப்பட வேண்டிய அச்சு மற்றும் எழுதுபொருள் செலவைக் கணக்கிட்டு அவை 2018, மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பில் எவ்வாறு தோன்றும் என்பதையும் குறிப்பிடவும். (மார்ச்–2024)

எழுதுபொருளுக்காக கொடுத்த தொகை (2017–2018) – ₹ 1,500
எழுதுபொருள் இருப்பு (ஏப்ரல் 1, 2017) – ₹ 300
எழுதுபொருள் இருப்பு (மார்ச் 31,2017) – ₹ 200

தீர்வு:

2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் க/கு

ப வ

செலவுகள்	₹	₹	வருமானம்	₹	₹
எழுது பொருள்கள்;					
தொடக்க இருப்பு	300				
கூட்டுக: கொள்முதல்	1,500				
	1,800				
கழிக்க: இறுதி இருப்பு	200	**1,600**			

2018, மார்ச் 31 ஆம் நாளைய இருப்புலைக் குறிப்பு

பொறுப்புகள்	₹	சொத்துகள்	₹
		எழுது பொருள்கள் இருப்பு	200

5. பின்வரும் விவரங்கள் ஒரு மன்றத்தின் 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனவும் காடவும். (மார்ச்–2021,26)

ப 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடியும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் செலுத்தல்கள் க/கு வ

பெறுதல்கள்	₹	₹	செலுத்தல்கள்	₹	₹
சந்தா					
2017–2018	10,000				
2018–2019	50,000	65,000			
2019–2020	5,000				

மன்றத்தின் உள்ள 200 உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஆண்டு சந்தாவாக ₹400 செலுத்துகின்றனர். 2017–2018 ஆண்டில் இன்னும் பெற வேண்டிய சந்தா ₹ 2,000.

தீர்வு:

ப 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் க/கு வ

செலவுகள்	₹	₹	வருமானம்	₹	₹
			சந்தா	50,000	
			கூட்டுக:பெறவேண்டிய சந்தா	30,000	80,000

2018, மார்ச் 31 ஆம் நாளைய இருப்புலைக் குறிப்பு

பொறுப்புகள்	₹	சொத்துகள்	₹
முன்கூட்டிப் பெற்ற சந்தா (2019–2020)	5,000	பெற வேண்டிய சந்தா	
		2017–2018	2,000
		2018–2019	30,000

6. **காரைக்குடி விளையாட்டு மன்றத்தின் 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடியும் ஆண்டுக்குரிய இறுதிக் கணக்குகளில் பின்வருவன எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும். (மார்ச்–2025)**

விவரம்	₹
2018, ஏப்ரல் 1 அன்று தொடர் விளையாட்டுப் போட்டி நிதி	**90,000**
2018, ஏப்ரல் அன்று தொடர் விளையாட்டுப் போட்டி நிதி முதலீடு	**90,000**
தொடர் விளையாட்டுப் போட்டி நிதி முதலீடு மீதான வட்டி பெற்றது	**9,000**
தொடர் விளையாட்டுப் போட்டி நிதிக்கான நன்கொடை	**10,000**
தொடர் விளையாட்டுப் போட்டிச் செலவுகள்	**60,000**

தீர்வு: 2018, மார்ச் 31 ஆம் நாளைய இருப்புலைக் குறிப்பு

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹
தொடர் விளையாட்டு போட்டி நிதி	90,000		தொடர்	**90,000**
கூட்டுக: விளையாட்டு போட்டி நிதி முதலீடு மீதான வட்டி பெற்றது	9,000		விளையாட்டுப் போட்டி நிதி முதலீடு	
கூட்டுக: விளையாட்டு போட்டி நிதிக்கான நன்கொடை	10,000			
	1,09,000			
கழிக்க: தொடர் விளையாட்டுப் போட்டிச் செலவுகள்	60,000	**49,000**		

7. **அந்தோணி மற்றும் அக்பர் என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 3:2 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 2018, ஜனவரி 1 அன்று அவர்களின் முதல் கணக்குகளின் இருப்புகள் அந்தோணி ₹ 60,000 மற்றும் அக்பர் ₹ 40,000 ஆகும். 2018, ஏப்ரல் 1 அன்று அந்தோணி கூடுதல் முதலாக ₹ 10,000 கொண்டு வந்தார். அவ்வாண்டில் அக்பர் ₹ 5,000 கூடுதல் முதல் கொண்டு வந்தார். 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் அண்டுக்குரிய முதல் மீது வட்டி ஆண்டுக்கு 6 % எனக் கண்க்கிடவும்.**

தீர்வு:

அந்தோணி முதல் மீது வட்டி:

முதல் மீது வட்டி= முதல் தொகை X வட்டி வீதம் X வட்டிக்குரிய காலம்

தொடக்க முதல் (1 வருடம்) = 60,000 X $\frac{6}{100}$ = ₹ 3,600

கூடுதல் முதல் (9 மாதங்கள்) = 10,000 X $\frac{6}{100}$ X $\frac{9}{12}$ = ₹ 450

முதல் மீது வட்டி ₹ 4,050

அக்பர் முதல் மீது வட்டி:

முதல் மீது வட்டி= முதல் தொகை X வட்டி வீதம் X வட்டிக்குரிய காலம்

தொடக்க முதல் (1 வருடம்) = 40,000 X 6/100 = ₹ 2,400

கூடுதல் முதல் (6 மாதங்கள்) = 5,000 X$\frac{6}{100}$ X $\frac{6}{12}$ = ₹ 150

முதல் மீது வட்டி ₹ 2,550

8. மன்னன் மற்றும் ரமேஷ் என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 3:2 என்ற இலாப விகிதத்தில் பகிர்ந்து வருகின்றனர். 2018, ஏப்ரல் 1 அன்று அவர்களின் முதல் முறையே மன்னன் ₹ 1,50,000 மற்றும் ரமேஷ் ₹ 1,00,000 ஆகும். அவர்களின் நடப்புக் கணக்குகள் ₹ 25,000 மற்றும் ₹ 20,000 என வரவிருப்பைக் காட்டியது. 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய முதல் மீது வட்டி 6 % எனக் கணக்கிட்டு, அதற்குரிய குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும். (மார்ச்–2023)

தீர்வு:

முதல் மீது வட்டி = முதல் தொகை X வட்டி வீதம் X வட்டிக்குரிய காலம்

மன்னன் முதல் மீது வட்டி = 1,50,000 X $\frac{6}{100}$ = 9,000

ரமேஷ் முதல் மீது வட்டி = 1,00,000 X $\frac{6}{100}$ = 6,000

நாள்	விவரம்	பே.ப. எண்	பற்று ₹	வரவு ₹
2018 மார்ச்31	முதல் மீது வட்டி க/கு ப மன்னன் நடப்பு க/கு ரமேஷ் நடப்பு க/கு		15,000	 9,000 6,000
	இலாப நட்டப் பகிர்வு க/கு ப முதல் மீது வட்டி க/கு		15,000	 15,000

9. அன்பு என்பவர் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளி , கூட்டாண்மை ஒப்பாவணத்தின்படி எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 12 % கணக்கிடப்படுகிறது. 2018, டிசம்பர் 31 ஆம் முடிவடியும் ஆண்டில் அவருடைய எடுப்புகள் பின்வருமாறு; (மார்ச்–2025)

நாள்	₹
மார்ச் 1	6,000
ஜூன் 1	4,000
செப்டம்பர் 1	5,000
டிசம்பர் 1	2,000

பெருக்குத் தொகை முறையைப் பயன்படுத்தி எடுப்புகள் மீது வட்டி கணக்கிடவும்.

தீர்வு:

எடுப்பு நாள்	எடுப்புத் தொகை ₹	வட்டிகுரிய காலம் டிசம்பர் 31 வரை	பெருக்குத் தொகை ₹
மார்ச் 1	6,000	10	60,000
ஜூன் 1	4,000	7	28,000
செப்டம்பர் 1	5,000	4	20,000
டிசம்பர் 1	2,000	1	2,000
மொத்த பெருக்குத் தொகை			1,10,000

எடுப்புகள் மீது வட்டி= மொத்த பெருக்குத் தொகை X ஆண்டு வட்டி வீதம் X $\frac{1}{12}$

$$= 1{,}10{,}000 \times \frac{12}{100} \times \frac{1}{12} = ₹\ 1{,}000$$

10. ஆகாஷ், பாலா, சந்த்ரு மற்றும் டேனியல் ஆகியோர் ஒரு நிறுவனத்தின் கூட்டாளிகள். கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாதபோது பின்வருவனவற்றை எவ்வாறு மேற்கொள்வீர்கள்?

I. **ஆகாஷ் என்பவர் அதிக முதல் வழங்கியுள்ளார். அவர் முதல் மீது வட்டி ஆண்டுக்கு 10% கோருகிறார்.**

II. **பாலா ஒவ்வொரு மாதமும் ₹ 3,000 எடுத்துக் கொள்கிறார். ஏனைய கூட்டாளிகள் பாலாவிடம் ஆண்டுக்கு 8 % எடுப்புகள் மீது வட்டி நிறுவனத்திற்கு அளிக்குமாறு கேட்கிறார்கள். ஆனால், கூட்டாளிகள் அதனை ஒப்புக்கொள்ளவில்லை.**

III. **ஆகாஷ், இலாபத்தினை முதல் விகிதத்தில் பகிர்ந்தளிக்க வேண்டும் என்கிறார். ஆனால் பிற கூட்டாளிகள் அதனை ஒப்புக்கொள்ளவில்லை.**

IV. **டேனியல் தனது நேரத்தையும் தொழிலில் செலவிடுதால் அவர் ஒவ்வொரு மாதமும் ₹10,000 ஊதியம் வேண்டுமென்று கோஒருகிறார்.**

V. **சந்துருவால் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட கடன் ₹ 50,000. அவர் கடன் மீது வட்டி ஆண்டுக்கு 12 % வேண்டுமென்று கோருகிறார். (மே–2022)**

தீர்வு:

I. ஆகாஷ் முதல் மீது வட்டி பெற உரிமை உடையவரல்ல.

II. பாலா எடுப்பு மீது வட்டி பெற உரிமை உடையவரல்ல.

III. இலாபங்கள் சமமாக பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

IV. டேனியல் ஊதியம் பெற உரிமை உடையவரல்ல.

V. சந்துருவுக்கு கடன் மீது வட்டி 6 % அனுமதிக்கலாம்.

11. சுமதி என்பவர் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளி. அவர் வழக்கமாக ஒவ்வொரு மாதமும் ₹ 5,000 எடுத்துக் கொள்கிறார். எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 4 % கணக்கிடப்பட வேண்டும். எடுப்புகள் மீது வட்டி சராசரி கால முறையைப் பயன்படுத்தி கீழ்கண்ட சூழ்நிலையில் கணக்கிடவும். அவர்,

i. **ஒவ்வொரு மாதத் தொடக்கத்தில் எடுத்திருந்தால்**

ii. **ஒவ்வொரு மாத இடையில் எடுத்திருந்தால் (மார்ச்–2026)**

தீர்வு:

மொத்த எடுப்புத் தொகை = 5000 X 12 = 60,000

i. <u>ஒவ்வொரு மாதத் தொடக்கம்:</u>

$$\text{எடுப்புகள் மீது வட்டி} = \text{மொத்த எடுப்புத் தொகை} \times \text{வட்டி வீதம்} \times \frac{\text{சராசரி காலம்}}{12}$$

$$= 60{,}000 \times \frac{4}{100} \times \frac{6.5}{12} = 1{,}300$$

ii. <u>ஒவ்வொரு மாத இடையில் :</u>

$$\text{எடுப்புகள் மீது வட்டி} = \text{மொத்த எடுப்புத் தொகை} \times \text{வட்டி வீதம்} \times \frac{\text{சராசரி காலம்}}{12}$$

$$= 60{,}000 \times \frac{4}{100} \times \frac{6}{12} = 1{,}200$$

12. ஒரு நிறுவனத்தின் கடந்த நான்கு ஆண்டுகளின் இலாபங்கள் மற்றும் நட்டங்கள் பின்வருமாறு: 2015 : ₹ 15,000 ; 2016 : ₹ 17,000 ; 2017 : ₹ 6,000 (நட்டம்) ; 2018 : ₹ 14,000. நான்கு ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 5 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும். **(மே–2022)**

தீர்வு:

நற்பெயர் = சராசரி இலாபம் X கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

$$\text{சராசரி இலாபம்} = \frac{\text{மொத்த இலாபம்}}{\text{ஆண்டுகளின் எண்ணிக்கை}}$$

$$= \frac{15,000 + 17,000 - 6,000 + 14,000}{4} = \frac{40,000}{4} = 10,000$$

நற்பெயர் = 10,000 X 5 = 50,000

13. புதிய கூட்டாளி ஒருவரை சேர்ப்பதற்காக, ஒரு நிறுவனம் 4 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 3 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் கூட்டு சராசரி இலாபத்தினை பயன்படுத்தி, நற்பெயரை மதிப்பிட முடிவு செய்தது. கடந்த நான்கு ஆண்டுகளின் இலாபங்கள் மற்றும் அந்தந்த ஆண்டுகளுக்கான நிறைகள் பின்வருமாறு: **(மார்ச் –2021)**

விவரம்	2015	2016	2017	2018
இலாபம் (₹)	20,000	22,000	24,000	28,000
நிறை	1	2	3	4

நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

தீர்வு:

ஆண்டு	இலாபம்	நிறைகள்	கூட்டு இலாபம்
2015	20,000	1	20,000
2016	22,000	2	44,000
2017	24,000	3	72,000
2018	28,000	4	1,12,000
மொத்தம்		**10**	**2,48,000**

$$\text{கூட்டு சராசரி இலாபம்} = \frac{\text{கூட்டு இலாபங்களின் மொத்தம்}}{\text{நிறைகளின் மொத்தம்}} = \frac{2,48,000}{10} = 24,800$$

நற்பெயர் = கூட்டு சராசரி இலாபம் X கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

= **24,800 X 3 = 74,000**

14. பின்வரும் விவரங்களிலிருந்து கடந்த 4 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 3 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும். **(மார்ச்–2025)**

ஆண்டு	முடிவு	தொகை
2015	இலாபம்	5,000
2016	இலாபம்	8,000
2017	நட்டம்	3,000
2018	இலாபம்	6,000

தீர்வு :

நற்பெயர் = சராசரி இலாபம் X கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

$$\text{சராசரி இலாபம்} = \frac{\text{மொத்த இலாபம்}}{\text{ஆண்டுகளின் எண்ணிக்கை}}$$

$$= \frac{5,000 + 8,000 - 3,000 + 6,000}{4} = \frac{16,000}{4} = 4,000$$

நற்பெயர் = 4,000 X 3 = 12,000

15. பின்வரும் விவரங்களைக் கொண்டு, ஆண்டுத்தொகை முறையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும். (மார்ச்–2026)

i. **சராசரி இலாபம் – ₹ 14,000**
ii. **சாதாரண இலாபம் – ₹ 4,000**
iii. **சாதாரண இலாப விகிதம் – 15 %**
iv. **நற்பெயருக்கான கொள்முதல் ஆண்டுகள் – 5**

5 ஆண்டுகளில் ஆண்டுக்கு 15 % என்ற வட்டி விகிதத்தில் ₹ 1 ன் தற்போதைய ஆண்டுத்தொகை மதிப்பு ₹ 3.352.

தீர்வு:

உயர் இலாபம் = சராசரி இலாபம் – சாதாரண இலாபம்

= ₹ 14,000 – ₹ 4,000

= ₹ 10,000

நற்பெயர் = உயர் இலாபம் X ஆண்டுத்தொகை மதிப்பு = 10,000 X 3.352

= ₹ 33,520

16. பின்வரும் தகவல்களிலிருந்து மூலதனமாக்கல் முறையில் நற்பெயரின் மதிப்பைக் காண்க.

(மார்ச்–2024)

அ) சராசரி இலாபம் = ₹ 20,000

ஆ) சாதாரண இலாபம் விகிதம் = ₹ 10%

இ) பயன்படுத்தப்பட்ட முதல் = ₹ 1,50,000

தீர்வு:

சராசரி இலாபத்தின் மொத்த மூலதன மதிப்பு = $\frac{\text{சராசரி இலாபம்}}{\text{சாதாரண இலாப விகிதம்}}$ X 100

= $\frac{20,000}{10}$ X 100 = **₹2,00,000**

நற்பெயர் = வியாபாரத்தின் மொத்த மூலதன மதிப்பு – பயன்படுத்தப்பட்ட முதல்

= 2.00,000 – 1,50,000

= ₹ 50,000

17. இராஜேஷ் மற்றும் இரமேஷ் எனும் கூட்டாளிகள் 3 : 2 என இலாப நட்டம் பகிர்ந்து வந்தனர். இராமன் என்பவரை புதிய கூட்டாளியாக சேர்த்துக் கொண்டனர். அவர்களது புதிய இலாப விகிதம் 5:3:2. பின்வரும் மறுமதிப்பீடுகள் செய்யப்பட்டன. தேவையான குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து மறுமதிப்பீட்டுக் கணக்கு தயாரிக்கவும். (மார்ச்–2024)

i. கட்டத்தின் மதிப்பு ₹ 15,000 உயர்த்தப்பட்டது.

ii. இயந்திரத்தின் மதிப்பு ₹ 4,000 குறைக்கப்பட்டது.

iii. வாரா ஐயக்கடன் ஒதுக்கு ₹ 1,000 உருவாக்கப்பட்டது.

தீர்வு: ப மறுமதிப்பீட்டுக் க /கு வ

விவரம்	₹	₹	விவரம்	₹
இயந்திரம் க / கு		4,000	கட்டடம் க / கு	15,000
வாரா ஐயக்கடன் ஒதுக்கு		1,000		
மறுபதிப்பீட்டு இலாபம்				
இராஜேஷ் முதல் க / கு	6,000			
இரமேஷ் முதல் க / கு	4,000	**10,000**		
		15,000		15,000

18. ஹரி, மாதவன் மற்றும் கேசவன் ஆகிய கூட்டாளிகள் இலாப நட்டங்களை 5:3:2 என்ற விகிதத்தில் பகிர்ந்து வருகின்றனர். 2017, ஏப்ரல் 1 அன்று வான்மதி புதிய கூட்டாளியாக சேர்த்தபின் அவர்களின் இலாப விகிதம் 4:3:2:1 என முடிவு செய்யப்பட்டது. பின்வரும் சரிகட்டுதல்கள் செய்யப்பட வேண்டும்.

i. வளாகத்தின் மதிப்பு ₹ 60,000 உயர்த்தப்பட்டது.

ii. சரக்கிருப்பு மீது ₹ 5,000, அறைகலன் மீது ₹ 2,000, இயந்திரம் மீது ₹ 2,500 தேய்மானம் நீக்கப்பட வேண்டும்.

iii. கொடுபட வேண்டிய பொறுப்பு ₹ 500 உருவாக்கப்பட வேண்டும்.

குறிப்பேட்டுப் பதிவுகள் தருக.

தீர்வு:

நாள்	விவரம்	பே.ப. எண்	பற்று ₹	வரவு ₹
	வளாகம் க/கு ப		60,000	
	மறுமதிப்பீட்டு க/கு			60,000

	மறுமதிப்பீட்டு க/கு ப		10,000	
	சரக்கிருப்பு க/கு			5,000
	அறைகலன் க/கு			2,000
	இயந்திரம் க/கு			2,500
	கொடுபட வேண்டிய பொறுப்பு க/கு			500
	மறுமதிப்பீட்டு க/கு ப		50,000	
	ஹரி முதல் க/கு			25,000
	மாதவன் முதல் க/கு			15,000
	கேசவன் முதல் க/கு			10,000

19. சாம் மற்றும் ஜோஸ் என்னும் கூட்டாளிகள் 3:2 என்ற விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களை பகிர்ந்து வந்தனர். 2018 ஏப்ரல் 1 அன்று ஜோயல் என்பவரை கூட்டாளியாகச் சேர்த்துக் கொண்டனர், ஜோயல் கூட்டாண்மையில் சேர்ந்த அன்று நிறுவன ஏடு நற்பெயர் மதிப்பினை ₹ 30,000 என்று காட்டியது. மாறுபடும் முதல் முறையில் பராமரிக்கப்படுவதாக கருதி கூட்டாளிகளின் பின்வரும் முடிவுகளின்படி குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும். (மார்ச்–2023)

I. ஏட்டில் உள்ள நற்பெயர் தொகை முழுவதையும் போக்கெழுதுவது.

II. ஏட்டில் உள்ள நற்பெயரி;ல் ₹ 20,000 மட்டும் போக்கெழுதுவது.

தீர்வு:

குறிப்பேட்டுப் பதிவு

நாள்	விவரம்	பே.ப. எண்	பற்று ₹	வரவு ₹
2018	சாம் முதல் க/கு ப		18,000	
ஏப்ரல் 1	ஜோஸ் முதல் க/கு ப		12,000	
	நற்பெயர் க/கு			30,000

குறிப்பேட்டுப் பதிவு

நாள்	விவரம்	பே.ப. எண்	பற்று ₹	வரவு ₹
2018	சாம் முதல் க/கு		12,000	
ஏப்ரல் 1	ஜோஸ் முதல் க/கு		8,000	
	நற்பெயர் க/கு			20,000

20. விவின், ஹரி மற்றும் ஜாய் என்ற கூட்டாளிகள் 3:2:1 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வருகின்றனர். 2017, மார்ச் 31 அன்று ஹரி விலகினார். அவர் விலகிய நாளில், நிறுவனத்தின் ஏடுகளில் பொதுகாப்பு ₹ 60,000 காட்டியது. பொதுகாப்பு மாற்றுவதற்கான குறிப்பேட்டுப் பதிவு தருக.

தீர்வு:

குறிப்பேட்டுப் பதிவு

நாள்	விவரம்	பே.ப. எண்	பற்று ₹	வரவு ₹
2017	பொதுகாப்பு க/கு ப		60,000	
மார்ச் 31	விவின் முதல் க/கு			30,000
	ஹரி முதல் க/கு			20,000
	ஜாய் முதல் க/கு			10,000

21. குமார் நிறுமத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து 2018, மார்ச் 31 ஆம்நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பொது அளவு வருமான அறிக்கையை தயார் செய்க. **(மார்ச்–2023)**

விவரம்	2017–2018
	₹
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	5,00,000
இதர வருமானம்	20,000
செலவுகள்	3,00,000

தீர்வு:

குமார் நிறுவனத்தின் பொது அளவு வருமான அறிக்கை

விவரம்	தொகை ₹	விற்பனை மூலம் பெற்ற வருவாயில் சதவிதம்
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	5,00,000	100
கூட்டுக: இதர வருமானம்	20,000	4
மொத்த வருவாய்	5,20,000	104
கழிக்க: செலவுகள்	3,00,000	60
வரிக்கு முன்னர் உள்ள இலாபம்	2,20,000	44

22. ராதா நிறுமத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து 2017, மார்ச் 31 ஆம்நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பொது அளவு வருமான அறிக்கையை தயார் செய்க. (மார்ச்–2024)

விவரம்	2016–2017 ₹
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	**4,50,000**
இதர வருமானம்	**67,500**
செலவுகள்	**1,35,000**

தீர்வு: ராதா நிறுவனத்தின் பொது அளவு வருமான அறிக்கை

விவரம்	தொகை ₹	விற்பனை மூலம் பெற்ற வருவாயில் சதவிதம்
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	4,50,000	100
கூட்டுக: இதர வருமானம்	67,500	15
மொத்த வருவாய்	5,17,500	115
கழிக்க: செலவுகள்	1,35,000	30
வரிக்கு முன்னர் உள்ள இலாபம்	3,82,500	85

23. பரணி நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து ஒப்பீட்டு வருமான அறிக்கையைத் தயார் செய்யவும். **(மார்ச்–2025)**

விவரம்	2016–17 ₹	2017–18 ₹
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	30,000	45,000
இதர வருமானம்	4,000	6,000
செலவுகள்	10,000	15,000
வருமான வரி %	30	30

தீர்வு: பரணி நிறுமத்தின் ஒப்பீட்டு வருமான அறிக்கை

விவரம்	2016–17	2017–18	தொகையின் (+) அல்லது குறைதல் (–)	சதவீதத்தின் கூடுதல் (+) அல்லது குறைதல் (–)
	₹	₹		
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	30,000	45,000	+ 15,000	+ 50
கூட்டுக: இதர வருமானம்	4,000	6,000	+ 2,000	+ 50
மொத்த வருமானம்	**34,000**	**51,000**	**+ 17,000**	**+ 50**
கழிக்க: செலவுகள்	10,000	15,000	+ 5,000	+ 50
வரிக்கு முன் இலாபம்	24,000	36,000	+ 12,000	+ 50
கழிக்க: வருமான வரி 30 %	7,200	10,800	+ 3,600	+ 50
வரிக்கு பின்னர் உள்ள இலாபம்	**16,800**	**25,200**	**+ 8,400**	**+ 50**

24. மரியா மற்றும் கலா நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பொது அளவு வருமான அறிக்கையை தயார் செய்யவும்.

(மார்ச்–2022)

விவரம்	மரியா நிறுமம் ₹	கலா நிறுமம் ₹
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	1,00,000	2,00,000
இதர வருமானம்	10,000	30,000
செலவுகள்	70,000	1,20,000

தீர்வு:

ராதா நிறுவனத்தின் பொது அளவு வருமான அறிக்கை

விவரம்	மரியா நிறுமம்		கலா நிறுமம்	
	தொகை ₹	விற்பனை மூலம் பெற்ற வருவாயில் சதவிதம்	தொகை ₹	விற்பனை மூலம் பெற்ற வருவாயில் சதவிதம்
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	1,00,000	**100**	2,00,000	**100**
கூட்டுக: இதர வருமானம்	10,000	**10**	30,000	**15**
மொத்த வருவாய்	1,10,000	**110**	2,30,000	**115**
கழிக்க: செலவுகள்	70,000	**70**	1,20,000	**60**
வரிக்கு முன்னர் உள்ள இலாபம்	40,000	**40**	1,10,000	**55**

25.கீழ்க்கண்ட தகவல்களிலிருந்து நடப்பு விகிதத்தைக் கணக்கிடுக: **(மார்ச்–2025)**

விவரம்	₹	விவரம்	₹
குறுகிய கால முதலீடுகள்	40,000	நிலைச் சொத்துகள்	5,00,000
சரக்கிருப்பு	2,00,000	வணிகத்தின் கடனீந்தோர்	80,000
வணிகத்தின் கடனாளிகள்	1,20,000	செலுத்தற்குரிய	50,000
பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுகள்	80,000	மாற்றுச்சீட்டு	20,000
ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்குச் சமமானவைகள்	10,000	கொடுபடவேண்டிய செலவுகள்	3,00,000
		நீண்டகால பொறுப்புகள்	

தீர்வு:

$$\text{நடப்பு விகிதம்} = \frac{\textit{நடப்பு சொத்துகள்}}{\textit{நடப்பு பொறுப்புகள்}}$$

(நடப்பு சொத்துகள் = 40,000+200000+1,20,000+80,000+10,000 = 4,50,000)

(நடப்பு பொறுப்புகள் =80,000+50,000+20,000 = 1,50,000)

$$= \frac{4,50,000}{1,50,000} = 3:1$$

26. பின்வரும் தகவல்களிலிருந்து புற அக பொறுப்புகள் விகிதத்தைக் கணக்கிடவும்:

(மே–2022, மார்ச்–2024)

விவரம்	₹
I பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்	
1. பங்குதாரர் நிதி	
(அ) பங்கு முதல்	
நேர்மைப் பங்குமுதல்	1,00,000
(ஆ) காப்புகள் மற்றும் மிகுதி	60,000
2. நீண்டகாலப் பொறுப்புகள்	
நீண்ட காலக் கடன்கள் (கடனீட்டுப் பத்திரங்கள்)	80,000
3. நடப்புப் பொறுப்புகள்	
(அ) கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள்	50,000
(ஆ) இதர நடப்புப் பொறுப்புகள்	
கொடுபடவேண்டிய செலவுகள்	30,000
மொத்தம்	**3,20,000**

தீர்வு:

